RbS00724, N11VD
N24·14·11.
186742

1357

5 - SEP 1924

Regd: No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷிஷு,

1923—1924.

ஸம்புடம் 14.

ஆவணிமீ.

AUGUST.

ஸஞ்சிகை 11.

பத்ராதிபர்.

நடாதூர்
ஸ்ரீநிவாஸாசார்யர்,
பீ.ஏ., பீ.எல்.

கார்யதர்சி.

ஆர். ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள்.	285
2. பண்ட்ராபுரம்:—ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்.	294
3. கூடிதங்கள்.—ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல தாதாசார்யர்.	296
4. மதப்ரஷ்ட விஷயம்:—ஸ்ரீ. உ. வே. கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியன்.	298
5. ச்ராத்தம்:—ஸ்ரீ. உ. வே. காடந்தேத்தி கோபாலாசார்யர்.	301
6. ச்ருதி ப்ராமாண்யம்:—ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலசக்ரவர்த்தி, பி.ஏ.,	305
7. அபியுக்தர்களுக்கோர் விஜ்ஞாபனம்:— ஸ்ரீ. உ. வே. சொரையூர்-பெ. வ. ஸ்ரீநிவாஸாசாரியர்.	309
8. இயற்பா:—ஸ்ரீ. உ. வே. வை. கோபாலக்ருஷ்ணமாசார்யர்.	311
9. நம்மாழ்வாரின் வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும். ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம், சே. நரஸிம்மாசார்யர்.	17

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

உலக ப்ரஸித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3.



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

10-ரூபாய்கள் இனும்.

அடியில்கண்ட கேழ்விகளுக்கு உத்தரம் கொடுப்போர்க்கு ரூ. 10 இனும் கொடுக்கப்படும்.

மறுமொழிகளை ஸபை கார்யதர்சிக்கு அனுப்பவும்.

(1) சிவ, சிவ, என்று பலமுறை பஜனம் செய்வதுபோல், விஷ்ணு விஷ்ணுவென்று நாம் பஜனம் செய்யாததற்கு காரணம் என்ன?

(2) விஷ்ணு ஆலயங்களில் பூஜிக்கப்பட்டுவரும் அர்ச்சாரூபியான பகவானுக்கு விஷ்ணு என்ற நாமம் இல்லாததற்குக் காரணம் என்ன?

(3) வைஷ்ணவர்களில், விஷ்ணு அய்யர், விஷ்ணு அய்யங்கார், விஷ்ணு நாயுடு முதலான பெயர்கள் ஏன் வைத்துக்கொள்ளவில்லை?

(4) எல்லோரும், ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத், என்று ஸங்கல்பித்துக் கொள்ளும் காரணம் என்ன?

(5) விஷ்ணு வென்ற சப்தத்திற்கு முக்யமான பொருள் எது?

(6) சேஷசயனத்தில் சங்கு சக்ரகதாபாணியாய் பகவான் காணப்படாததற்குக் காரணம் என்ன?

(7) சயனமன்னியில் அபயப்ரதான காலத்தில் சதுர் புஜத்தோடு சங்கு சக்ராதிகளுடன் காணப்படும் காரணமென்ன?

(8) ஸ்ரீ தேவி பூதேவிகள் பத்நியாய் ஆனதற்குக்காரணம் என்ன? அப்படி ஆன காலம் எப்போது?

(9) புராணங்களில் விஷ்ணுவென்று சொல்லுகிற வ்யக்தி அவதார ரூபமா? அல்லது விஷ்ணுவென்று எக்காலத்திலும் ஸ்வரூபமாய் எக்காலத்திலும் எவ்விடத்திலாவது குறிப்பிட்டு விளங்குகிறாரா என்று சொல்ல முடியுமா?

திருக்காட்டுப்பள்ளி

க்ருஷ்ண சாஸ்திரிகள்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.
காரியதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ரக்தாக்ஷி (ஹ), ஆவணிமீ. [ஸஞ்சிகை 11.

" தர்மார்த்தகாமமோக்ஷாம்ஶ்ச ஸஹோபாயாந் யதா முநே।
நாநாக்யாநேதிஹாஸேஷு வர்ணயாமாஸ தத்த்வவித்॥"

ஸ்ரீபாகவதம். 1-9-28॥

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஶீலவ்ருத்த ஃபலம் ஶ்ருதம் (வித்யையைக் கற்றதற்கு நல்லொழுக்கம் பயனாகவேண்டும்) என்ற நீதியின்படி நமது வாழ்நாளில்

நல்லொழுக்கம்

நாம் நடந்துகொள்ளாவிடில், நமது கல்வியானது கழுதை சுமக்கும் பாரத்துக்குச் சமானமாம் என்று ரிஷிகள் அறுதியிட்டார்கள். நல்லொழுக்கமானது மனம் வாக்கு காயம் ஆகிய த்ரிகரணங்களையும் பற்றியுள்ளது. 1 இம்மூன்று கரணங்களும் ஒத்துழைப்பின் அதுவே அவச்யம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் தெளிவு, தர்மம், அர்த்தம், காமம், (அறம், பொருள், இன்பம்) ஆகிய மூன்று புருஷார்த்த வர்க்கங்களில் அபேக்ஷையற்றிருத்தல்) (அதாவது அவற்றை வலியத்தேடாதிருத்தல்) என்பவையோடு கூடி ஸௌக்கியத்துக்கு ஒரு அருமருந்தாகின்றது என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார்.

1. உபேக்ஷ்யேஷு வைஶத்யம் த்ரிவர்கே நிரபேக்ஷதா।
கரணத்ரய ஸாரூப்யம் இதி ஸௌக்ய ரஸாயநம்॥

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்.

186792

'நல்லொழுக்கமல்ல தல்லற்பமிக்கும்' என்னும் தமிழ்வசனமும் ப்ரஸித்தமானது. ஒவ்வொருவருடைய க்ஷேமங்களுக்கும் பொதுவாய் ஜநஸமூஹத்தின் நன்மைக்கும் இந்நல்லொழுக்கம் இன்றியமையாதது. இதை நிலைநிறுத்திப் பெருகச் செய்யவே காருணிகர்களான ரிஷிகள் தர்மசாஸ்த்ரங்களைப் 'பலபடிகளில் ப்ரவர்த்திப்பித்தார்கள்.' இதைவிட மேலான பகவதாராதனம் கிடையாதென்பது 'காமக்ரோதவிஹீநம் ஹ்ருதயம் வாக் அந்ருதாதிநா ஹிம்ஸாதிரஹித: காய: கேசவாராதநம் த்ரயம் ||' (ஆசை முதலியவையற்ற ஹ்ருதயமும் பொய் முதலியவற்றால் தோஷமாக்கப்படாத வாக்கும், பிறரை ஹிம்ஸித்தல் முதலியவை யில்லாத சரீரமும், ஆகிய இம்மூன்றும் கேசவனுடைய சிறந்த ஆராதனங்கள்) என்று ரிஷியினால் விளக்கப்பட்டது.

சாஸ்த்ர வச்யர்களாய் தர்ம ஸம்ரக்ஷணத்திலேயே நோக்காகவிருந்த இம்மஹாரிஷிகள் ஏதாவது சிலவிஷயங்களைப்பற்றக் கடினமாகப் பேசியிருந்தாலும், அது அவ்வோ சாஸ்த்ர நியமங்களைக்கடப்பதினால், கடப்பவனுக்கும் பிறர்க்கும் விளையக்கூடிய தீங்கின் திரளை நினைத்து. அதைத் தடுக்கவேண்டிய ஆவச்யகதையை வற்புறுத்தும் பொருட்டுச் சொல்லப்பட்டதென்றே கொள்ளவேண்டும். விஷயபோகங்களே முக்யமாயிருக்கும் இக்காலத்தின் நாகரீக முறைகளையும் விதேசீயப் பழக்கங்களையும் கொண்டு, பூர்வர்கள் இஹலோக பரலோக நன்மைகளைக் கருதியும் அந்தந்தக் கால வர்த்தமானங்களை யநுஸரித்தும் செய்திருக்கும் விதி முறைகளை லகுவாக நினைத்துவிடக்கூடாது. அவற்றிலிருந்து நமது சாச்வதமான ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமாக உபதேசிக்கப்பட்ட அநுஷ்டானநிதிகளையும் நியமந்தவறினால் அதற்குச் செய்யவேண்டிய பரிஹாரங்களையும் கைக்கொண்டு வாழ்நாட்களை வீழ்நாட்களாக்காமல் கடைத்தேறுவதே சான்றதாகும். பலதேசங்களினுடையவும் பல மதங்களினுடையவும் தர்மோபதேசங்களையும் நமது ஸநாதன தர்ம ப்ரவர்த்தகர்களான ரிஷிகளின் உக்திகளோடு சீர்தூக்கிப் பார்த்தால், இவை எவ்வளவு மேம்பாடுள்ளவை யென்பது தானே விளங்கும்.

இத்தகைய ஸ்ம்ருதிகள் பலவுள. இவை அபாரஸமுத்ரமாகிய வேதத்தின் உட்கருத்துகளை வெளியிடுமவை என்பது ஆஸ்திகர்களுடைய கொள்கை. ஸ்ம்ருதி உபதேசங்களில் சிலவற்றிற்கு இப்போது அத்யயநத்திலுள்ள வேதபாகங்களில் மூல ச்ருதி காணப்படாவிடினும், இவ்வுபதேசங்கள் வேதத்துக்கு விரோதமில்லாமையாலும் ஸர்வஜ்ஞர்களான ரிஷிகளினால் லோகஹிதத்தின் பொருட்டு வெளியிடப்பட்டவை யாகையாலும், அவற்றுக்கு மூல ச்ருதி யிருந்து இப்போது நமக்குக் கிடைக்காமல் மறைந் போய் விட்டதென்று அறியத்தக்கதென்று ஆஸ்திக ஜநங்கள் ஏகோபித்து ஒப்புக்கொள்

சென்னை-600 005.

ளும் மற்றோர் நியாயம். எனவே தான் ஸர்வலோகஹிதார்த்தமாக, வேதத்தை முதலில் உபதேசித்த ஸர்வேச்வரனே 1'வேதமும் ஸ்ம்ருதியும் என் கட்டளைகள். அவற்றை மீறிநடப்பவன் என் கட்டளையைக் கடப்பவன்; எனக்கு த்ரோஹம் செய்பவன். அவன் என் பக்தனானாலும் வைஷ்ணவனாகமாட்டான்; (எனக்கு அந்தரங்கனாகமாட்டான் என்றபடி)' என்று அருளிச்செய்தான்

ஸ்ம்ருதிகள் பலரிஷிகளால் ஆக்கப்பட்டுளவெனினும் ஒவ்வொரு ரிஷிக்கும் ஓரோர் விஷயங்களில் விசேஷ நோக்கமுண்டு. அவற்றுள் தக்ஷஸ்ம்ருதியானது ப்ரும்மசர்யம் முதலிய நான்கு ஆச்ரமங்களிலுள்ளவர்களும் தினசரியாக நடத்தவேண்டிய அநுஷ்டானங்களை விரித்துரைக்கும். இந்த ஸ்ம்ருதியில் காணப்படும் தினத்தின் காலவிபாகங்களும் அவற்றுக்குரித்தான தர்மாநுஷ்டானங்களும் பகவத் சாஸ்த்ரங்களில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விதிக்கப்பட்ட பஞ்சகால தர்மங்களும் ஒத்திருக்கும் ப்ரகாரத்தை ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் ஸ்ரீதேசிகன் பரக்க வருளிச்செய்திருக்கிறார். இங்கு இந்த தக்ஷஸ்ம்ருதியிலிருந்து ஸாமாந்யமாய் எல்லோரும் பின்பற்றி நடத்தவேண்டிய சில தர்மங்கள் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.

ஸ்வதர்மாநுஷ்டானம்.

விவேகியான பரமைகாந்தி எவனும் காலையிலெழுந்தது முதல் இரவில் உறங்கும் வரை ஒரு க்ஷணப்பொழுதையேனும் வீணாக்ககூடாதென்றும் அதிலும், அஜ்ஞானத்தினாலாவது லோபத்தினாலாவது ஒருவன் தனக்குரித்தான கர்மங்களை விட்டு மற்றவைகளைச் செய்யப் புகுகிறவன் பதிதனாய்விடுவான் என்றும் முதலில் சொல்லப்பட்டது. லோகாநுபவத்திலும் ஒரு அதிகாரியின் கீழ் வேலை செய்கிறவன் தன் அலுவலை விட்டு மற்றொருவன் வேலையில் புகுந்தால் தன்வேலையைச் செய்யாத குற்றம் மிகுந்து நிற்பதும் பிறர் வேலையைச் செய்ததற்கு ஒரு பஹுமானமும் அற்றிருப்பதும் ப்ரஸித்தம். இதையும் நினைத்தே ஸ்ரீ கீதாசார்யன் 2. 'ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பதில் தீங்கு நேரிட்டாலும் அது நன்மையைப் பயக்கும்; பிறர் தர்மத்தை நடத்தப்புகுவது பயத்தை விளைவிக்கத்தக்கது' என்றருளிச்செய்தார். 'குலங்களாய வீரிரண்டில்' பிறந்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும். 3 அடைவே சாஸ்த்

---

1. ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாம் உல்லங்க்ய வர்த்ததே |
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ: ||

விஷ்ணு தர்மம்.

2. ஸ்வதர்மே நிதநம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ: |

3. உத்ஸன்னா ... ஶாஶ்வதா: |

ரங்கள் அடைத்த கர்மங்களெல்லாம் பக்தியுடன் ஸ்வயம் ப்ரயோஜனமாக அநுஷ்டிக்கப்படுமாகில் அவையே பகவதாராதனங்களாய் பரமபுருஷார்த்தத் துக்கு ஸாதனங்களாகின்றன வென்றும் உபதேசித்தான். ஆதலால் எவரும் தமக்கு ஸ்வபாவமாக ஏற்பட்ட கருமங்களைத் தாழ்ந்ததென்றாவது, பிறர் அநுஷ்டிப்பதற்காக விதிக்கப்பட்டவைகளை ஏதோ விசேஷமுள்ளவைகளென்றாவது பிரமிக்கக்கூடாது. அவ்வண்ணமே தமது க்ருத்யங்கள்தான் ச்லாக்யங்கள் பிறரது தாழ்ந்தவை என்று நினைக்கும் தற்பெருமையும் பெரிகழ்ச்சியுமாகிற படுகுழிகளில் விழாதபடி ஜாக்கிரதையுடன் நடக்கவேண்டும்.

ஸ்நாநமும் ஸந்த்யையும்.

விடியுமுன் நித்திரையை விட்டு எழுந்து தேஹ ஸம்பந்தமான சௌசங்களை விதிப்படி செய்துகொண்டபிறகு தந்ததாவனம் செய்து ஸ்நாநம் பண்ணவேண்டுமென்பது எல்லோர்க்கும் பொதுவான விதி. மேற்பார்வையாகப் பார்க்கும்போது பல் தேய்ப்பதைப்பற்றி ஸ்ம்ருதி கர்த்தாக்கள் வெகு கண்டிப்பாயும் தந்த காஷ்டத்தை (பற்குச்சியை) உபயோகப்படுத்தாமலிருப்பதை மஹா பாபமாயும் சொல்லியிருப்பது ஆச்சரியம்போல் தோன்றலாம். ஆனால் பல் பரிசுத்தமில்லாமலிருந்தால் அதுவே கணக்கற்ற வ்யாதிகளுக்குக் காரணமாமென்பது ஆதுநிகவைத்ய ப்ரமுகர்கள் நன்றாயறிந்த விஷயம். நமது தேசத்தவர்களின் பல் சுத்தியைப்பற்றி மேல்நாட்டவர்கள் வியப்பதும் ப்ரஸித்தம். சென்ற ஐரோப்பிய மஹாயுத்தத்தில் இந்திய சிபாய்கள் பற்குச்சியை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும் ஸந்தர்ப்பத்தில் படமெடுத்து ஆங்கில சித்திரப் பத்திரிகைகள் ப்ரசுரித்ததை நமது நேயர்களறிவார்கள்! சாம்பல் முதலிய அசுத்த த்ரவ்யங்களினால் பல் தேய்க்கலாகாதென்று சாஸ்த்ரம்.

நவத்வாரங்களோடு கூடின இச்சரீரம் அத்யந்தமாக அழுக்கடைந்து இரவும் பகலும் வியர்வை பெருகிக் கிடப்பதன்றோ! உறங்கும்போது இந்திரியங்கள் அயர்வடைகின்றன; உத்தம அதமங்களான அங்கங்கள் எல்லாம் ஸமமாய்விடுகின்றன. இதற்கெல்லாம் ஸ்நாநமே சுத்தியைத்தருவது. காலையில் ஸ்நாநம்செய்வதினால் இந்த ஆயுளிலும் பின்னரும் த்ருஷ்ட அத்ருஷ்டங்களான பலன்கள் கிடைக்கின்றன. உஷஃ (விடியுமுன்) காலத்திலும், ஸூர்யன் உதிக்கும்போதும் ஸ்நாநம் பண்ணுகிறவன் ஜபம் முதலிய எல்லாக் கருமங்களுக்கும் அர்ஹனாய் பரிசுத்தனாகிறான். இதுவே எல்லா பாபங்களையும் போக்க வல்ல ப்ராஜாபத்யமென்னும் ப்ராயச்சித்தத்துக்கு ஸமானமாகும். இதனால் ஏழு ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்கள் மூன்று வர்ஷங்களில் ஒழிந்துவிடுகின்றன வென்னப்பட்டது. 1 நியதமாய் ப்ராதஃஸ்நாநம் பண்ணுகிற

1. [illegible]

ஸாதுவுக்கு ரூபம், தேஜஸ், பலம், சௌசம், நீண்ட ஆயுள், சரீர ஆரோக்யம், பேராசையின்மை, தீக்கனவின்மை, தபஸ், அறிவு, என்னும் பத்து குணங்கள் ப்ரகாசிக்கின்றன. ஸ்நாநமானது மனதுக்குத் தெளிவைக்கொடுக்கும்; அழகையும் ஸௌபாக்யத்தையும் பெருகச்செய்யும்; துக்க சோகங்களைப் போக்கும்; பெருமையையும் ஜ்ஞாநத்தையும் பயக்கும். குளிர்ந்த ஜலத்திலே ஸ்நாநம் செய்யவேண்டும். வ்யாதி முதலியவற்றால் வருந்துகிறவர்கள் வெந்நீரை உபயோகப்படுத்தலாமென்பது சாஸ்த்ர ஸம்மதம். ஜலஸ்நாநத்துக்கே சக்தியற்றவர்களுக்கு மந்த்ர ஸ்நாநம் முதலியவை விதிக்கப்பட்டிருக்கின்றன.

இதன் பிறகு ஸந்தியாவந்தனம் பண்ணவேண்டும். இரண்டு ஸந்திகளிலும் (காலையிலும் மாலையிலும்) மத்தியாஹ்நத்திலும் பகவதாராதன ரூபமான ஸந்தியாவந்தனமநுஷ்டிக்கவேண்டும். அப்படிச் செய்யாதவன், அதிலும் ப்ராம்மணன், ஜீவதசையிலேயே ப்ராம்மண்யத்தை யிழந்து, இறந்தபின் நாயாகப்பிறப்பா னென்னப்பட்டது. 1 ஸந்த்யையை விட்டவன்என்றைக்கும் பரிசுத்தியற்றவன். அவன் வைதிக கர்மங்கள் எவற்றுக்கும் அர்ஹனல்லன். அவன் எந்தக் கர்மத்தைச்செய்தாலும் அது பலமுடையதாகாது.

பிறகு சாஸ்த்ரவிஹிதங்களான ஹோமகார்யங்களையும் தேவபூஜையையும் ஆசார்யவந்தனத்தையும் வேதாப்யாஸாதிகளையும் செய்யவேண்டும். ப்ராம்மணர்களுக்கு வேதாப்யாஸம் ஒன்றே பரிபூர்ணமான தபஸ்ஸு என்னப்பட்டது. முதலில் வேதத்தை க்ரஹித்தல், பிறகு அதன் அர்த்தவிசாரம் பண்ணுதல், அதை அப்யாஸம் பண்ணுதல் (உருப்போடுதல்), ஜபம் செய்தல், சிஷ்யர்களுக்கு வேதத்தை அத்யயனம் செய்வித்தல் ஆகிய இவ்வைந்தும் வேதாப்யாஸத்தின ப்ரகாரங்கள்.

பௌஷ்யர்கள்

இதன் பிறகு பகவதாராதனத்துக்கும் தன் பௌஷ்யவர்க்கங்களுடைய (தான் காப்பாற்ற வேண்டியவர்களுடைய) ஸம்ரக்ஷணத்துக்காகவும் வேண்டிய ஸாமக்ரீகளையும் த்ரவ்யத்தையும் ஸம்பாதிக்கவேண்டும். மாதா, பிதா, பார்யை மக்கள், தன்னை அடுத்த சக்தியற்றவர்கள், தன் இல்லத்துக்கு வந்த அதிதிகள் ஆகிய இவர்கள் பௌஷ்ய வர்க்கத்தில் சேர்ந்தவர்கள்.

தனிகர்களுக்கு வாரிசுகளான ஜ்ஞாதிகளும் பந்துக்களும் தன்னைச் சரணமடைந்த அநாதைகளும் இன்னும் மற்றவர்களும் பௌஷ்யவர்க்கத்தில் சேர்ந்தவர்கள். க்ரஹஸ்தாச்ரமத்திலிருப்பவன் எல்லா பூதங்களுக்கும் அன்

1. [illegible]

ஙம் முதலியவைகளை யளிக்கவேண்டும். ஜ்ஞானவான்களுக்கு விசேஷதானங்களைச் செய்யவேண்டும், இல்லாவிட்டால் நரகமடைவான். பௌஷ்யவர்க்கங்களைக் காப்பாற்றுவது ஸ்வர்க்கத்துக்கு ஸாதனமென்று புகழப்பட்டது. அவர்களைப் பீடிப்பது நரகத்துக்குக் காரணமாம் எனப்பட்டது. எவன் பஹுஜனங்களை ரக்ஷித்துக்கொண்டு வாழ்கிறானோ அவனொருவனே உயிரோடு இருப்பவன். தம் வயிற்றையே சுமக்கும் மானிடப்பதர்கள் உயிரோடு இருப்பினும் அவர்கள் நடைப்பிணங்களே! தன் நன்மையைக் கருதுகிறவன் சக்திபற்ற தீனர்களுக்கும் கதியற்ற அனாதைகளுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் கொடுத்து உதவக்கடவன். 1. அப்படிக் கொடுக்காதவர்கள் பிறர் பொருளை அனுபவிப்பவர்களே யாவார். பிறர்க்குக் கொடுத்துதவும் பணமே தன் பணமாகும். மற்றவை பிறர் பொருட்டு காப்பாற்றப்படுமவையே. ஒருவன் அனேகர்களின் பொருட்டும் மற்றொருவன் தன் குடும்பத்தின்பொருட்டும் ஜீவிக்கிறான். எவன் தன்மட்டில் என்று நினைக்கிறானோ அவன் தன் வயிற்றை நிறப்பியும் துக்கமுள்ளவனே ஆகிறான்.

பஞ்சமஹாயஜ்ஞமும் க்ருஹஸ்தாச்ரமமும்.

இதன் மேல் தக்ஷர் மாத்யாந்நிக ஸ்நாநம் மாத்யாந்நிக அநுஷ்டானங்கள், பகவதாராதனம் முதலியவற்றை விவரிக்கிறார். இவற்றில் முக்கியமானதொன்று பஞ்சமஹாயஜ்ஞம், அதாவது தேவதைகள், ரிஷிகள் பித்ருக்கள் மனுஷ்யர்கள், புழுவரையிலுள்ள பூதங்கள், ஆகியவர்களுக்கு த்ருப்திசெய்தலேயாம். 2 தேவர்களும், மனுஷ்யர்களும், மற்ற ப்ராணிகளும் என்றும் க்ருஹஸ்தனை அண்டிப் பிழைப்பவர்களாதலின் க்ருஹஸ்தன் எல்லாரையும் விட ச்ரேஷ்டன் என்று சொல்லப்பட்டது. மற்ற (ப்ரும்மசர்யம், வாநப்ரஸ்தம், ஸந்யாஸம்) ஆகிய மூன்று ஆச்ரமங்களுக்கும் க்ருஹஸ்தனே காரணமாகிறான். இவன் துன்பமடைந்தால் மற்றவர்களும் துன்புறுவர்கள். வ்ருக்ஷத்துக்கு அதன் வேரே ப்ராணன் அதன் ஸ்கந்தம் (உடல்) கிளைகள் தளிர் முதலியவையெல்லாம் வேறு நசித்தால் நசித்துவிடுகின்றன. அவ்விதமே க்ருஹஸ்தனும் மற்றவர்களுக்கு வேரின் ஸ்தானத்திலிருப்பவன். ஆகையால் க்ருஹஸ்தன் ராஜாவினால் ஸர்வப்ரகாரத்தினாலும் ரக்ஷிக்கப்பட வேண்டியவன். ராஜாவும் மற்ற ஆச்ரமிகளும் எப்போதும் க்ருஹஸ்தனை பஹுமானித்து கௌரவிக்க வேண்டும். 3. சாஸ்த்ரோபதே

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

சாதிகளைச்செய்ய மஹாமேதாவியான க்ருஹாச்ரமியே மேற்பட்டவன் என்று சாண்டில்ய பகவானும் தமது விசிஷ்டதர்ம சாஸ்த்ரத்தில் உபதேசித்தார்.

க்ருஹஸ்தனும் தன் கர்மங்களை விட்டவனானால் எதைச்செய்தும் குடும்பத்தோடிருப்பதினாலேயே உண்மையான க்ருஹஸ்தனாகமாட்டான். ஸ்நானம், ஹோமம், தானம் முதலியவற்றைச் செய்யாமல் வயிற்றை நிரப்புகிறவன், தேவர்கள் முதலியவர்களுக்குக் கடன்பட்டவனாய் நரகமழுந்துவது திண்ணம். பிறரறியாமல் (பிறர்க்கு ஈயாமல்) இவன் சோறுண்பது வீணேயாகும், ஒருவன் அந்நத்தை புஜிக்கிறான்; மற்றவன் அந்நத்தினால் புஜிக்கப்படுகிறான். எவனொருவன் தனதன்னத்தைப் பிறரோடு பகிர்ந்துண்கின்றானோ அவனே அந்நத்துக்கிரையாவதில்லை. இப்படிப் பிரித்துக்கொடுக்கும் மஹானாய் பொறுமையுடனும் தயையுடனும் கூடினவனாய் தன் கர்மாநுஷ்டானங்களைத் தவறாது எப்போதும் செய்துவருகிற க்ருஹஸ்தனே ஸ்வர்க்கத்தையடையத் தக்கவன். தயை லஜ்ஜை. க்ஷமை, ச்ரத்தை, அறிவு, த்யாகம் நன்றியறிவு, ஆகிய இக்குணங்களை உடையவனே உத்தம க்ருஹஸ்தனாவான். இப்படி அந்நத்தை விபாகித்துக் கொடுத்த பிறகே சேஷத்தை உண்ணவேண்டும், நான்காவது வர்ணத்தவர்களுக்கு, வேதமந்த்ரங்களை உச்சரிக்க அதிகாரமில்லாவிடினும், 1. அவர்களும் நமஸ்காரமாகிற மந்த்ரத்தைக் கொண்டு இல்லறம் நடத்துதல், சௌசம், பௌஷ்யவர்க்க பரிபாலநம், ச்ராத்தம், பஞ்சமஹாயஜ்ஞம் முதலியவற்றை நடத்தவேண்டு மென்றும் அவற்றை விடக்கூடா தென்றும் யாஜ்ஞவல்க்ய ரிஷி அறுதியிட்டார்.

வாஸ்தவமான ஸுகத்தை இச்சிப்பவன் தன்னைப்போலவே பிறரையும் பார்க்கவேண்டும். பிறருடையவும் தன்னுடையவும் ஸுகதுக்கங்கள் வெவ்வேறன்றே! பிறர்க்குண்டாகும் ஸுகதுக்கங்கள் பின்னர் தம்மிடத்திலேயே வந்து சேர்ந்துவிடுகின்றன. சிரமப்படாமல் த்ரவ்யம் கிடைக்காது. த்ரவ்யமில்லாமல் ஒன்றையும் செய்ய முடியாது. ஒன்றும் செய்ய முடியாதவன் என்ன தர்மத்தை செய்வான்? தர்மமின்றி ஸுகம் ஏது? தர்மத்தினால் கிடைக்கக்கூடிய ஸுகத்தை எல்லோருமபேக்ஷிக்கிறார்கள். ஆகையால் எல்லா வர்ணத்தவர்களும் எப்போதும் தர்மத்தையே செய்யக்கடவர்கள் என்றதாயிற்று. பரலோக ஸாதகமான தர்மத்தை ந்யாய மார்க்கத்தில் ஸம்பாதித்த த்ரவ்யத்தைக்கொண்டே செய்யவேண்டும். பரத்ரவ்யத்தை அக்ரமமாகக் கைப்பற்றிச்செய்யும் தர்மத்தையும் திருப்பணியையும், பக்தியோடு கொடுக்கப்பட்ட இலை, பூ, தீர்த்தம் முதலியவைகளினாலேயே பரமப்ரீதியை

1. [illegible]

யடையும் பரிபூர்ணனை பகவான் உகக்கவே மாட்டான். நம்மாழ்வாரும் 'நம் மெய்வருத்திக் கைசெய் துய்மினே' வென்றருளிச்செய்தார். சாண்டில்ய பகவானும், 1 க்ரமமாகக் கிடைத்த த்ரவ்யத்தாலாவது, தன் நிலத்தில் விளைந்தவற்றாலாவது பகவத்பக்தி நிறைவினால் பரிசுத்தர்களான விப்ரர்களிடமிருந்து யாசிக்கப்பட்ட வஸ்துக்களினாலாவது, சரீர ப்ரயாஸத்தினால் ஸம்பாதிக்கப்பட்டவைகளினாலாவது, இவையொன்று மில்லாவிட்டால் காட்டு இலை, பூ, கனிமுதலிய வற்றாலாவது நித்யமும் அயர்வின்றி பகவத் கைங்கர்யத்தை நடத்தவேண்டு' மென்று அருளிச்செய்தார். இப்படியே ஸ்ரீ பாஷ்யகாரரும் நியாயமார்க்கங்களில் ஆர்ஜ்ஜிக்கப்பட்ட த்ரவ்யத்தைக் கொண்டே ஸ்ரீவைஷ்ணவர்கள் பகவதாராதன சரீரபோஷணாதிகளைச் செய்யக் கடவர்கள் என்று கீதாபாஷ்யத்தில் ஸ்பஷ்டமாக வருளிச்செய்தார். கோவில் கட்டுவதற்கென்றும் பாகவதாராதனத்துக்கென்றும் ராஜத்ரவ்யாபஹாரணம், ஸ்வபத்நீ விக்ரயம் முதலிய குமார்க்கங்களிலாவது இழிந்து பணம் சேகரித்து அவற்றைச்செய்து பெரும்பதம் பெற்றதாகச் சொல்லும் அஜ்ஞாநத்தின் பயனான கட்டுக்கதைகளை ஸ்ரீவைஷ்ணவர்களாதரிக்கலாகாது. ஸாத்விகங்களான இதிஹாஸாதிகளில் அத்தகைய கதைகளும் கிடையாது. இவைகளை நம்பினால் அநந்தகல்யாண குணாகரனான ஸர்வேச்வரனை பேராசை, ஆற்றாமை, பக்ஷபாதம் முதலியவைகளையுடைய க்ஷுத்ரனாக வரக்கவேண்டி வரும். தர்மாதர்மங்களுக்கும் ஓர் வரம்பு இல்லாமற் போய்விடும். லோகத்தில் ஸாமான்யமாய் மற்ற விடங்களில் செய்யப்படும் குற்றமே ராஜக்ருஹத்திலும் அந்தப்புரத்திலும் செய்யப்படுமாகில் எப்படி அது அதிக தண்டனைக்குக் காரணமாகுமோ, அப்படியே ஸாமாந்யமாய்ச் செய்யப்படும் ந்யாயாதிக்ரமமானது பகவத் பாகவத கைங்கர்யமென்கிற பெயரால் செய்யப்படுமாகில் அது ஸர்வ சாஸிதாவாய் ஸர்வஜ்ஞனாயிருக்கும் பரிபூர்ணனுக்கு மிகவும் அதிகமான சீற்றத்தை விளைக்குமென்பது சிறிது ஆலோசித்தால் தானே விளங்கும்.

தர்ம பத்நீ

இவ்வளவு பெருமைவாய்ந்த இல்லறத்தை நடத்த உள்ளத்தோடு ஒத்து நடக்கும் தர்ம பத்நீ இன்றியமையாதவன். 'இல்லாளகத்திருப்பின் இல்லாத தொன்றுமில்லை' என்ற வசநத்தின் படியே அநுகூலையாய் மனமொத்த பெண்சாதியைப்

1. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

1. படைத்தவனுக்கு க்ருஹாச்ரமத்தைக் காட்டிலும் மேலான பதமொன்றில்லை. அவளாலேயே தர்மார்த்தகாமங்களாகிற புருஷார்த்தங்களைப் பெருகின்றான். அநுகூலையாயும் வாக்கில் துஷ்டத்தனமில்லாதவளாயும் ஸாமர்த்திய சாலியாயும் ஸாதுவாயும் பிரியமாகப்பேசுகிறவளாயும் தன்னடக்கமுள்ளவளாயும் கணவனிடத்தில் பக்தியுள்ளவளாயுமிருப்பவள் தேவதையே யன்றிக் கேவலம் மனுஷ்ய ஜாதியிற் பிறந்தவளல்லள். எவனுக்கு மனைவி அநுகூலமோ அவனுக்கு ஸ்வர்க்கமும் எவனுக்கு இல்லாள் இல்லாளேயாகின்றாளோ அவனுக்கு நரகமும் நிச்சயம் என்பதில் ஸந்தேஹமில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் பரஸ்பரம் ப்ரீதியும் ஒருமனதான ஒழுக்கமும் நடக்குமாகில் இத்தகைய ஸௌக்யம் ஸ்வர்க்கத்திலும் கிடையாது. அஃதில்லையேல் அதைவிட மேற்பட்ட கஷ்டதசையு மில்லை. ஸுகத்துக்காக வன்றோ க்ருஹத்தில் வஸிப்பது! அந்த ஸுகமும் பத்நீ மூலமாய்க் கிடைக்கவேண்டியதாயிருக்கிறது. பதிக்கு அடங்கி அவன் மனதையறிந்து அவன் வசமாய் நடப்பவளே பத்நீ யெனப்படுவாள். எவனுக்குப் பெண்டாட்டி ப்ரதிகூலமானவளோ, (அதிலும் விசேஷித்து எவன் இரண்டு பெண்டாட்டிக்காரனோ), அவனுக்கு அவள் எப்போதும் துக்கத்தையும் சண்டையையும் கலஹத்தையும் பரஸ்பர பீடையையும் விளைவிப்பான். பூஷணங்கள் வஸ்த்ரங்கள் உண்டி முதலியவற்றால் எவ்வளவு த்ருப்தி செய்தாலும், புருஷனை அவள் அட்டைபோலன்றோ உரிந்து விடுவாள் 2. பேதை அட்டை ரத்தத்தை மட்டும் உரியும்; இவளோ வென்றால் இவனுடைய பணம் ஸம்பத்து மாம்ஸம் வீர்யம் பலம் ஸுகம் முதலிய எல்லாவற்றையுமல்லவோ அபஹரித்துவிடுகின்றாள்! கணவன் இளைஞனாயிருக்கும்போது அவனைக் கவலையுடன் எதிர்கொண்டழைப்பாள்; வயது முதிர்ந்தால் அவனை த்ருணமாகவே நினைப்பாள். ஆகையால் 3. அநுகூலையாயும் துஷ்டவாக்கில்லாதவளாயும் புத்திசாலியாயும் ஸாதுவாயும் மக்கட்பேறுள்ளவளாயு மிருக்கு மில்லாள் வெறும்

1. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
2. [illegible]
[illegible]
3. [illegible]
[illegible]

ஸ்த்ரீயல்ல; அவள் மஹாலக்ஷ்மீயே; இதில் ஸம்சயமில்லை. என்றும் சந்தோஷமுள்ள மனதுடன் ஸ்தாநம் மரியாதை முதலியவற்றை யறிந்தவளாய் பர்த்தாவுக்கு ப்ரியத்தைச் செய்பவளே மனைவி; மற்றவள் சரீரத்தைப் பிடிக்கும் ஜரை (கிழத்தன்மை)யே யென்னத்தட்டில்லை.

1. எவனுக்கு நாவும், பார்யையும், மக்களும், ஸஹோதரனும், ஸ்நேஹிதனும், வேலைக்காரனும், அடுத்தவர்களும் அடங்கி ஒத்திருக்கிறார்களோ அவனுக்கு இஹபர லோகங்களில் கௌரவமுண்டு. தர்ம பத்நீயே முதன்மையானவள். கேவலம் ரதியை வ்ருத்தி செய்கிறவள் அதற்கடுத்தபடியிலுள்ளவள் தான். இவ்விஷயத்தில் பலம் த்ருஷ்டத்திலேயே காணப்படும்; அத்ருஷ்டத்தைத் தேடவேண்டுவதில்லை. தோஷமற்றவள் தர்மபத்நீ யெனப்படுவாள். பத்நீ தோஷமடைந்துவிட்டால், நற்குணங்களமைந்த மற்றொரு ஸ்த்ரீயை விவாஹம் செய்துகொள்ளுவது தோஷமாகாது. தோஷமற்றவளாயும் கெட்ட நடவடிக்கை யில்லாதவளாயுமிருக்கும் பார்யையை, அதிலும் இளம் வயதில், எவன் தள்ளிவிடுகிறானோ அவன் மறுபிறப்பில் மலட்டு ஸ்த்ரீயாகப் பிறப்பான். அவ்விதமே ஏழையாயும் வ்யாதி க்ரஸ்தனுயுமிருக்கும் கணவனை அவமதிக்கும் பெண்சாதி கழுகாகவும் முதலையாகவும் அடிக்கடி பிறப்பாள்.

ஸ்ரீ:.

பண்டராபுரம்.

(ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்.)

பம்பாய் ராஜதானியில் பிரஸித்திபெற்ற விஷ்ணு க்ஷேத்திரமாகிய பண்டராபுர(Pandharpur)மென்னும் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரம் ஒன்று இருக்கிறது. அந்த விடத்தில் ஸாந்நித்யம் செய்யும் அர்ச்சாரூபியான பகவானுக்குப் பண்டரிநாதனென்றும் தாயாருக்கு ருக்மாபாய் என்றும் திருநாமம். பகவான் பண்டராபுரத்தில் எப்படி ஸாந்நித்யம் செய்தாரென்பது பின் வருங்கதையினால் வ்யக்தமாகும்.

முன்னொரு காலத்தில் புண்டலீ யென்னும் ப்ராம்மணனொருவன் தன்னுடைய தாய், தந்தை, மனைவியுடன் தக்ஷிணதேசத்திலிருந்து கங்காஸ்நானஞ்செய்ய உத்தேசித்துக் காசிக்குப் பிரயாணஞ்செய்துகொண்டிருந்தான். வழியில் தாய் தந்தையரை நன்றாக உபசரியாமல் பெண்டாட்டியையே அதிகமாகக் கவனித்துக்கொண்டு வந்தான். அதனால் தாய் தந்தையருக்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. இப்படி நடக்கையில் ஒரு நாள் இவர்கள் பண்டராபுரத்தில் ஒரு வீட்டில் தங்கினார்கள். அந்த வீட்டு யஜமானன் இவர்களை மிகுந்த ஆதரத்தோடு உபசரித்தான். ஆயினும் அவனு

1. [illegible]

ஸ்ரீ:.

பண்டராபுரம்.

PANDHARPUR

பண்டரிநாதனும் ருக்மாபாயும்.

டைய தாய் தந்தையர் மிகவும் வயது முதிர்ந்தவர்களாகையால் அவர்களை மிகவும் விசேஷமாக அவன் உபசரிப்பதைக்கண்டு புண்டலிக்கு மனஸ்ஸில் அதிக வருத்தம் உண்டாயிற்று. அந்த வருத்தத்தோடே அன்றிரவு தூங்கினான். மறுநாட்காலையில் எழுந்தவுடன் ஸ்திரீ ரத்னங்கள் என்று சொல்லக்கூடிய மூன்று ஸ்திரீகள் அந்த வீட்டில் எல்லாவேலைகளையும் செய்து கொண்டு, வந்த அதிதிகளையும் உபசரிக்க ஆரம்பித்தார்கள். புண்டலி தான் வந்த தினத்தில் இவர்களைககாணாமையால், இவர்களைப் பார்த்ததும் இன்னாரெனத் தெரிந்துகொள்ள விரும்பி, அவர்களுள் ஒரு ஸ்திரீயைப் பார்த்து நீங்கள் யார் என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ,—'நாங்கள் மூன்று பேரும் கங்கையும், யமுனையும், சரஸ்வதியும்; இந்த வீட்டு யஜமானன் தாய் தந்தையரை உபசரிப்பதைப்பற்றிச் சந்தோஷித்து அவரைப்பார்த்துப் போகவந்தோம்'— என்று சொல்லிப் புண்டலியைத் தங்களிடம் வரக்கூடாதென்றும் தடுத்தாள். புண்டலி பயந்து காரணத்தைக்கேட்க, அவர்கள், 'நீ தாய் தந்தையரை உபசரியாமல் உதாஸீனம் செய்துவிட்டாய்' அதனால் நீ மிகவும் பாபியானாய். ஆதலால் நீ எங்களிடம் வரத்தகாது என்றார்கள். இதைக் கேட்டவுடன் புண்டலி மிகவும் பச்சாத்தாபப்பட்டுக் காசிக்குப் போவதை உடனே நிறுத்திவிட்டுத் தாய் தந்தையர்களைச் சாஸ்த்ரோக்தமாக சுச்ரூஷை செய்ய ஆரம்பித்தான். பின்பு அவன் செய்யும் சுச்ரூஷைக்குப் பகவான் சந்தோஷமடைந்து அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி அநுக்ரஹித்தார். இப்படி அந்தப் புண்டலி யென்னும் ப்ராம்மணனிமித்தம் அந்த க்ஷேத்ரததில் ஆவிர்ப்பவித்த எம்பெருமானுக்கு பண்டரிநாதன் அல்லது புண்டரீகவரதன் என்று திருநாமம் உண்டாயிற்று. இந்தப்பெருமாள் அங்கே கோவிலில் அர்ச்சாரூபமாய் எழுந்தருளியிருந்து இப்பொழுதும் பக்தர்களுக்கு அநுக்ரஹம செய்துவருகிறா. இவரைத்தான் பாண்டுரங்க க்ஷேத்ரத்தில் ஸாந்நித்யம் செய்தவர் என்று ப்ராசீகமாந்த மஹாதேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் இந்த க்ஷேத்ரத்தின் மஹிமையைப்பற்றி, இந்த புண்யக்ஷேத்ரத்தில் நித்யவாஸம் செய்யும் பகவானை ஸேவித்த பாகவதர்களுடைய திருவடித் தூள்களால் அவர்கள் ஸஞ்சரிக்கும் எல்லா ப்ரதேசமும் பரிசுத்தமாக்கப்படுகிறதென்று அருளிச்செய்திருக்கிறார். இந்தப்பெருமாளின் அர்ச்சாரூபத்தை எல்லோரும் சேவித்து க்ருதார்த்தர்களாகவேண்டுமென்று எண்ணி இதனுடன் படம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தத்திருக்கோலம் 'ஸதூஜெவா ஸவ விதூஜெவா ஸவ' என்னும் வேதத்தின் ஆஜ்ஞையை ஸ்ரீமந்மஹாபாரதத்தில் தர்மவ்யாத உபாக்யான ரூபமாய் மஹர்ஷி பிரதிபாதித்திருக்கும் இந்த மஹாதத்வத்தின் பெருமையை இந்தக் கலியுகத்தில் ஜனங்களுக்கு வ்யக்தமாகவேண்டும் பொருட்டே அர்ச்சாரூபியாய் ஆவிர்பவித்த ப்ரகாரம் என்று அறியத்தக்கது.

ஸ்ரீ:

கடிதங்கள்.

(1)

ஸ்ரீமான் வேதாந்த தீபிகை பத்திராதிபர் ஸந்நிதிக்கு.

எம்பெருமானது அர்ச்சாவதாரவிஷயமாய் எழுதப்பட்ட ஒரு உபந்யாஸத்தில் பரார்த்தம் என்று ஏற்பட்டிருக்கிற ஆலயார்ச்சாவதாரத்தில் மாத்திரமே தான் ப்ரபத்யுபாயாநுஷ்டானம் செய்யலாமென்று திருவுள்ள மேற்படுகிறது. அது சரியா என்று அடியேனுக்கு ஸம்சயம் உண்டாகிறது.

அவரவர்களுக்கு பரார்த்தமென்கிற கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைவிட, தான் ஆராதிக்கும் அர்ச்சாரூபியான எம்பெருமானே எல்லாவிஷயத்திலும் பிரதானனாகையாலே உபாயாநுஷ்டானம் அங்கேசெய்து கொள்வது தான் ந்யாயமென்று அடியேனுக்குத் தோன்றுகிறது. அப்படி அநுஷ்டானமும் இருக்கிறது.

சில ஆலயங்களில் உபாயாநுஷ்டானத்துக்கு யாருக்குமே இடம் கிடைக்கிறதில்லை. சில ஆலயங்களில் நியதமாகச் சிலருக்கல்லது பொதுப்பட அனேகருக்குக் கிடைப்பதில்லை. ப்ரபத்தி அர்ச்சாவதாரரூபத்தில் மாத்திரமென்கிற சாஸ்திர நியமமு மில்லையே! சில கிராமங்களில் கோவிலே கிடையாது. கோவில் இருந்தாலும் சிலஸமயம் கோவிலுக்குப்போக முடிகிறதில்லை. அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் உபாயாநுஷ்டானத்திற்குக் கதியென்ன?

வேறுகதி யில்லாமையால் அங்கு கௌணமாக அவை அங்கீகரிக்கப்படுகின்றன வென்றால் கோவிலிலேயே உபாயாநுஷ்டானம் நடக்க வேண்டுமென்று ப்ரமாணம் இருந்தால் அல்லவோ இதைக் கௌணமாக்குவதற்கு இடமுண்டாகும்.

பஞ்சஸம்ஸ்கார ப்ரயோகத்தை விவரமாக எடுத்துக்காட்டுகிற ஹாரீத ஸ்ம்ருதியில் யாகஸம்ஸ்காரத்தில் ஆசார்யன் ஒரு அர்ச்சாமூர்த்தியை சிஷ்யனுக் கெழுந்தருளப்பண்ணிக்கொடுத்து, தானே அவன் கையால் திருவாராதனம் கண்டருளப்பண்ணி வைக்கக்கடவன் என்றும், அது முதல் சிஷ்யன் அந்த எம்பெருமானை ஆயுஷ்காலம் முழுதும் ஆராதிக்கக் கடவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸுந்தரம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்ந வதநேக்ஷணாம் ।
க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ண ரஜதாதிபி: ॥
தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் யஜேத் தாம் விசிந்தயேத் ।
விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம் ॥

ஸுந்தரமான திருமுக மண்டலமும் திருக்கண்களுமாக அழகுபொலிய ஒரு விஷ்ணு மூர்த்தியை ஸுவர்ணம் வெள்ளி முதலியவைகளில் ஒன்றினால் உகந்தருளப்பண்ணி, அதையே அர்ச்சிக்கவும் அதையே தண்டம் ஸமர்ப்பிக்கவும் அதையே ஆராதிக்கவும் அதையே தியானிக்கவுமாய் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவன் தோஷம் எல்லாம் நீங்கப்பெற்று பரப்ருஹ்மரூபியாகிய அந்த மூர்த்தியையே பிரவேசிக்கிறான் என்று சௌநகமஹர்ஷியின் வசனம் இருக்கிறது.

அவரவர்களின் க்ருஹார்ச்சை, பசுபுத்ராதிகளான க்ஷுத்ரங்களும் ஐஹிகங்களுமாகிய பலனை மாத்திரமே கொடுக்குமென்கிற சாஸ்த்ரார்த்தம் ரமணீயமாகத் தோன்றவில்லை.

ஸ்ரீமந்நாதமுனிகள் தொடக்கமான நம்பூர்வாசார்யர்களெல்லோரும் அர்ச்சாவதாராராதநம் செய்துவந்திருக்கிறார்களே. காம்யார்ச்சாராதநம் செய்த கொற்றை அவர்களுக்கு வராதா? அப்படிப்பட்ட அர்ச்சையின் திருவாராதனம் எப்படி நித்யமாக முடியும்! ஸரஸ்வதியால் ஸ்ரீ பாஷ்யகாரருக்குக் கொடுக்கப்பட்டு, அவரால் திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்கு ப்ரஸாதிக்கப்பட்டு மூன்று தலைமுறை அந்தத் திருவம்சஸ்தர்களால் திருவாராதனம் கண்டருளப் பண்ணப்பட்டு, தேசிகனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன், தேசிகனால் பிருஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமிக்கு அநுக்ரஹிக்கப்பட்டு, அது முதல் பரம்பரையாய் ஸ்ரீ பரகாலமடத்தில் திருவாராதனத்தில் எழுந்தருளியிருக்கிறார். ப்ரபத்யுபாயாநுஷ்டானம் ஹயக்ரீவன் ஸந்நிதியிலேதான் நடந்து வருகிறது.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் ஸ்வர்ந்நியமன முகமாக ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமிக்குத் திருவாராதனமாக எழுந்தருளினது முதல் ஸ்ரீ அஹோபில மடத்தில் பரம்பரையாய்த் திருவாராதனம் கண்டருளுகிறார். அங்கே ஸ்வாமிகள் (அழகிய சிங்கர்கள்) ப்ரபத்யுபாயாநுஷ்டானம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்மன் ஸந்நிதியிலேதான் செய்து வருகிறார்கள். அநாதி பரம்பராஸித்தமான இந்த இரண்டாசாரங்களும் திருவுள்ளம் பற்றத் தக்கனவை.

சின்ன காஞ்சீபுரம். ஸ்ரீ. ஸ்ரீசைல தாதாசார்யர்.

[இவ்விஷயம் தீபிகையின் இந்த ஸம்புடத்தின் 41-வது பக்கத்தில் (கார்த்திகைமீ ஸஞ்சிகையில்) குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஸ்ரீ ப்ரச்நஸம்ஹிதை 2-வது பாகம், 54-வது அத். 151-முதல் 156-வரையிலுள்ள ச்லோகங்களின் மொழிபெயர்ப்பே யன்றி யுக்தியினால் எழுதப்பட்டதல்ல. ப்ரமாணம் நேராகச் சொல்லும்போது அதை ஆக்ஷேபிக்க நமக்கு விரகிலலை. க்ருஹங்களில் அவரவர்கள் ஆராதிக்கும் அர்ச்சைகளில் ப்ரபத்தி செய்வதேதான் ந்யாயமென்பதற்கு இந்த ஸ்வாமி ப்ரமாணம் காட்டவில்லை. சில அசௌகர்யங்களையும் விசேஷ காரணங்களையுமிட்டு க்ருஹார்ச்சைகளிலும் ஸாளிக்ராம ஸந்நிதிகளிலும் ப்ரபத்தி செய்யப்படும் அநுஷ்டானம் சாஸ்த்ரம் ஸ்பஷ்டமாக விதிப்பதை பாதிக்கமுடியாது. அப்படி நடந்துவரும் அநுஷ்டானங்கள் சாஸ்த்ர ஸம்மதந்தானா என்பதை விசாரிக்க நாம் புகிறவில்லை. அதற்கு நாம் அதிகாரியுமல்ல.

ப்ரபத்தி அர்ச்சாவதார ரூபத்தில் அநுஷ்டிக்கப் படவேண்டுமென்பது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் த்வயாதிகாரத்தில் சரண சப்த வ்யாக்யானத்தில் 'சரணௌ என்கிற சப்தம் திவ்யமங்கள விக்ரஹத்துக்கு உபலக்ஷணம்' என்று தொடங்கி ஸ்ரீ தேசிகனால் விரிவாக வருளிச்செய்யப்பட்டது. அங்கு, திவ்யமங்கள விக்ரஹத்தின் 'ப்ராதான்யத்தைப் பற்ற, கத்யத்தில் குணங்களுக்கு முன்னே திவ்யமங்கள விக்ரஹத்தை யருளிச்செய்தார்' என்று ஸாதித்திருப்பதும் கவனிக்கத்தக்கது. ஸ்ரீ லோகாசார்யர் முமுக்ஷுப்படி முதலிய க்ரந்தங்களில் 'திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும், முறுவலும், ஆஸந பத்மத்திலே அழுந்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம். ரக்ஷகத்வ போக்யத்வங்களிரண்டும் திருமேனியிலே தோற்றும்' என்றிவ்விதமாக அருளிச்செய்திருப்பதையும் கவனிக்கவேண்டும்.

நம்மாழ்வார் திருவேங்கடமுடையான் பக்கலில் சரணாகதி செய்ததும், ஸ்ரீ பாஷ்யகாரர் சரணாகதி அநுஷ்டான ரூபமான கத்யத்தை ஸ்ரீ ரங்கநாதன் ஸந்நிதியில் அரு

ளிச் செய்ததும், ஸ்ரீ தேசிகன் தேவப் பெருமாள் ஸந்நிதியில் உபாயாநுஷ்டானம் பண்ணினதும் இப்பக்ஷத்தை ஆதரிக்கின்றன. ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார் ப்ரப்ருதிகள் எங்கு உபாய மனுஷ்டித்தார்கள் என்பது விளங்கவில்லை.

இந்த ஸ்வாமி காட்டியிருக்கும் ப்ரமாணங்களொன்றும் நமது பக்ஷத்துக்கு விரோதமில்லை. ப்ரபத்தி அநுஷ்டானம் ஆலயார்ச்சைகளில் நடக்கவேணுமென்றதினால் பூர்வாசார்கள் க்ருஹார்ச்சைகளில் தினசரி நடத்திவந்தயாக மென்ற ஸ்வயம் ப்ரயோஜகமான ஆராதனத்துக்கு ஒரு கொற்றையுமில்லை. க்ருஹாராதநங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பக்கலில் அனுஷ்டிக்கப்படும் உபாயங்களும் பரம்பரையாக முடிவில் ஸபலமாகக் குறையில்லை என்று ஒரு பக்ஷமும் உண்டு.

பத்ராதிபர்.]

(2)

மதப்ரஷ்ட விஷயம்.

ஸ்ரீ. உ. வே. வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு.

இந்த விஷயத்தைப்பற்றி, இஞ்சிமேடு, ஸ்ரீ. உ. வே. ரங்கநாதாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்ட கண்டன வ்யாஸத்தில் சிலவிஷயங்களுக்குச் சுருக்கமாக பதில் சொல்லுகிறேன்.

வாஜபேயம் ஸ்வாமி மதப்ரஷ்டர்களுக்கு என்று பொதுவாகவே வ்யாஸம் எழுதியிருக்கிறார். அப்படியிருக்க, இஞ்சிமேடு ஸ்வாமி ஒரு வ்யக்தியை நிர்த்தேசித்தே எழுதுவதுடன் ஷை வ்யக்தியின், அந்தஸ்து, படிப்பு முதலானவைகளைக்கூட கவனிக்காமல் அவன் இவன் என்று ஏகவசநத்தால் எழுதுவதிலிருந்து இஞ்சிமேடு ஸ்வாமிக்கு ஸாதாரணமாயுள்ள லோகமரியாதையைக்கூட அவலம்பிக்க இஷ்டமில்லை என்று தெரிகிறது. இது மிகவும் துக்கிக்கத்தகுந்த விஷயம். இஞ்சிமேடு ஸ்வாமி, வாஜபேயம் ஸ்வாமியின்பேரில், நான்கு விததோஷங்களை எடுத்துச்சொல்லுகிறார். இந்த பாபத்தை அபுத்தி பூர்வகத்தில் சேர்த்துவிட வாஜபேயம் ஸ்வாமி எண்ணியிருப்பதாதச் சொல்லுவது, இதைப் பதநீயமல்ல வென்று அவர்சொல்வது, ஸமபாதகமாகச் சொல்லி இதற்கு உபபாதக ப்ராயச்சித்தத்தைச் சொல்வது, தேவல ஸ்மிருதியைப்ரமாணமாக எடுப்பது.

(1) வாஜபேயம் ஸ்வாமி இந்தபாபத்தை அபுத்தி பூர்வகமாக ஸமர்த்திக்க ஓரிடத்திலும் ப்ரயத்நப்பட் டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இதை அவர் புத்திபூர்வகத்திலேயே சேர்த்திருக்கிறார். இதை தீபிகையில் 167 பக்கத்தில் ஸ்பஷ்டமாகக் காணலாம்.

(2) இதைப் பதநீயமல்ல வென்று, வாஜபேயம் ஸ்வாமி எவ்விடத்திலும் எழுதக் காணோம்! வைத்யநாத தீக்ஷிதீயத்தில் ஓரிடத்தில் காணப்படுகிற பதநீய பதத்திற்கு பஞ்சமஹாபாபம் என்று அர்த்தம் சொல்லியிருப்பது நிஜம் தான். அதைக்கொண்டு வேறு பதநீயம் கிடையாதென்று, எப்படி, அர்த்தம் ஆயிற்று?

(3) 'பலாத்காரம்' என்கிற பிரிவு ஒன்றை ஒப்புக்கொண்டு அதில் வாக்பலத்தையும் சேர்க்கலாமென்று வாஜபேயம் ஸ்வாமீ எழுதியது மிகவும் ந்யாயமாயும் சாஸ்த்ர ஸம்மதமாயும் இருக்கிறது. அப்படி ஒப்புக்கொண்டால், ஏதோ அநர்த்தம் வந்து விடும் என்பதே இஞ்சிமேடு ஸ்வாமியின் ஆக்ஷேப மென்று தோன்றுகிறது!

(4) தேவல ஸ்மிருதியைப்பற்றி இஞ்சிமேடு ஸ்வாமி எழுதியிருப்பது மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. அந்த ஸ்மிருதியை யாரோ வேண்டுமென்று எழுதி அச்சிட்டிருப்பதாக இவர் சொல்லுகிறார்! ப்ரஸித்தமாக அச்சிடப்பட்டிருக்கும் ஸ்மிருதியை கல்பிதமென்று இவர் எழுதுவதற்குச் சொல்லியுள்ள காரணங்கள் போதாதவை. சில வசநங்கள் இப்புஸ்தகத்தில் காணப்படவில்லை என்றாலும் அதனாலேயே இப்படி நிர்ணயம் சொல்வதாயிருந்தால் மந்வாதி ஸ்மிருதிகள் கூட பரக்கவேண்டியது தான். ஆசாரத்ருத்தக்காரர்கள் இம்மாதிரி எவ்வளவோ தோஷங்களை நமது மநு யாக்ஞவல்க்யாதிகளில் சொல்லியிருக்கிறதை இவர் அறிவாரோ? ப்ராசீன ஸ்மிருதிகளின் ஸித்தாந்தத்திற்கு விரோதமில்லாத பக்ஷத்தில் இதை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளத் தடை என்ன? முதலில் இதை ஒப்புக்கொள்ளக்கூடாதென்று எழுதிவிட்டு கடைசியில், தாம் செய்த அர்த்தத்தின்படி ஒப்புக்கொள்ளுவதாயிருந்தால் இந்த ஸ்மிருதியையும் ப்ரமாணமாகலாம் என்று எழுதுகிறார். இவரைப்போன்ற பண்டிதர்கள் இப்படி எழுதுவது வெகு ஆச்சர்யமாயிருக்கிறது!

இந்த ஸ்ம்ருதியில் தமக்கு விரோதமாயிருக்கிற பாகங்களை சூத்ரவிஷயமென்று தள்ளிவிடவேண்டுமென்று இவர் எழுதியிருக்கிறார். அதற்குச் சிறிதும் ஆதாரமிருப்பதாகக் காணோம். இந்த ஸ்வாமி சொல்லிய காரணங்களும் உசிதங்களாயில்லை. வசநங்கள் பொதுவாகவே யிருக்க, ஒருவன் விஷயத்தில் மட்டும் ஒதுக்குவதற்குத் தகுந்த ப்ரமாணம் வேண்டாமா? யுக்தியால் சொன்னால் யுக்திக்கு அளவு என்ன? இந்த ஸ்ம்ருதியில் வெளிபிடப்பட்டிருக்கும் விஷயம் மந்வாதி ஸகல ஸ்ம்ருதிகளின் அபிப்பிராயத்திற்கும் ஒத்ததாகவே காணப்படுகிறபடியால் இந்த ஸ்ம்ருதியைத் தள்ளிவிட முடியாது. மேலும் இது நமக்கு அனுகூலமாகவேயிருக்கிறது.

புத்திபூர்வக பதநீயங்களுக்கு ப்ராயச்சித்தம் கிடையாதென்று கீழே சொல்லிவிட்டு மேல் 9-10 வது பக்கங்களில் மதப்ரஷ்டனை நாஸ்திக பாபியில் சேர்க்கவேணுமென்றும் அவனுக்கு ஹாரீதர் சொல்லிய மூன்று ருது ஸாத்யமான ப்ராயச்சித்தம் உண்டென்றும் ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் இந்தக் காலத்தில் அவ்வளவு கடினமான ப்ராயச்சித்தத்தை அனுஷ்டிப்பது கஷ்டமாகையால் மதப்ரஷ்டர்களுக்கு விமோசனமில்லை யென்று அடுத்தாப்போல் சொல்லுகிறார். இக்காலத்தில் முக்யகல்பமாக ப்ராயச்சித்தங்களை அனுஷ்டிக்கமுடியாத போதிலும் கௌணகல்பத்தைக்கொண்டு அனுஷ்டிக்கலாமென்பதையும் இந்த ஸ்வாமி அறிந்தவராகையால் தான் "செய்து கொண்டாலும்" என்கிற பக்ஷத்தையும் சொல்லி செய்துகொண்டாலும் இங்கு ஸம்வ்யவஹாரம் கிடையாதென்று தீர்மானிக்கிறார். அதற்கு ப்ரமாணம் 'வைஹிஷ்ஸ-ஓஸயயாநி' என்கிற ஸூத்ரமென்கிறார். இந்தவிடத்தில் வாஜபெயம் ஸ்வாமி ஸம்வ்யவஹார விஷயங்களைப்பற்றி சாஸ்த்ர தாத்பர்யங்களை விவரித்துச்சொல்லி யிருப்பதைவிட்டு இஞ்சிமேடு ஸ்வாமி ப்ரஹ்ம ஸூத்ரத்தில் போய் ப்ரமாணம் தேடினார். ஆயினும் அந்த ஸூத்ரமும் அதன் கீழ் உள்ள ஸூத்ரங்களும் நைஷ்டிக வானப்ரஸ்த ஸந்யாஸிகள் ஆகிய மூன்று அதிகாரிகள் விஷயம் மட்டுமே யல்லது க்ருஹஸ்தர்களுக்கு ஏற்பட்டதல்லவென்பதை இந்த ஸ்வாமி யோசித்தாரோ? ஷை மூன்று அதிகாரிகளும் பதிதர்களானால் ப்ராயச்சித்தம் செய்துகொண்ட பிறகும் கூட அவர்களுடன் கலந்துகொள்ளக்கூடாதென்று விசேஷ வசநமிருக்கிறது. ஆகவே விசேஷவசநபலத்தால் அவர்களுக்கு ஸம்வ்யவஹாரமில்லையென்று இருக்க இதை க்ருஹஸ்தன் விஷயத்திலும் எப்படி சேர்த்துக்கொள்ளுவது.

இந்த ஸ்வாமியே பின்னர் தமது வ்யாஸத்தில் மதப்ரஷ்டர்களுக்கு ஆறுமாஸ ஸாத்யமான ப்ராயச்சித்தமுண்டென்பதையும், அதை இக்காலத்திலும் அநுஷ்டிக்க முடியுமென்றும், ஸ்பஷ்டமாக ஒப்புக்கொண்டுவிட்டார். ஸம்வ்யவஹார விஷயத்தில் மட்டும் மறைவாகத் தமது அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார்.

வாஜபேயம் ஸ்வாமி சொல்லிய ப்ரமாணங்களும், யுக்திகளும் தப்பாகவே இருந்தபோதிலும் கூட, இஞ்சிமேடு ஸ்வாமியின் அபிப்ராயப்படியாவது மதப்ரஷ்டர்களுக்கு ப்ராயச்சித்தம் செய்துவைக்கலாமென்று ஏற்படுகிறதல்லவா? யாருடைய சாஸ்திர நிருபணம் ப்ரமாணமாயிருந்தால் தான் என்ன? எம்போன்றவர்கள் விஷயத்தையே கவனிப்பார்கள். எப்படியாவது இரண்டு பண்டிதர்களும் விஷயத்தை ஒப்புக்கொண்டு விட்டதற்கு நாம் ஸந்தோஷப்படவேண்டும். வழி எப்படியிருந்தால் என்ன?

இஞ்சிமேடு ஸ்வாமியின் திருவுள்ளப்படி, மதப்ரம்ச பாபமானது (1) ஸமூத்ரயான பாபத்தையும், சூத்ரஸேவா பாபத்தையும் விடச்சிறியதாக ஏற்படுகிறது. ஸமூத்ரயானத்திற்கும், சூத்ர ஸேவைக்கும், சாஸ்திரங்களில் அதிக தோஷம் ஒப்புக்கொள்ளப்பட்டு போதாயநாதிகள் அதற்கு, மூன்று வர்ஷஸாத்யமான ப்ராயச்சித்தம் சொல்லிவிட்டார்கள். மதப்ரஷ்டனுக்கோ இஞ்சிமேடு ஸ்வாமி, ஆறுமாஸ ஸாத்ய ப்ராயச்சித்தம் போதுமென்கிறார். ஆகவே ஸ்முத்ரயாநம் இதைவிட நிரம்பப் பெரியது. ஆனால் இக்காலத்தில் கூட்டம் கூட்டமாக வைஷ்ணவ குலத்தினர், இங்கிலாந்து, மெஸபடோமியா, ரங்கூன், கொழும்பு முதலான விடங்களுக்குப்போய் வருவது ஓர் திவ்யதேச யாத்திரையாகவே ஆய்விட்டது. இவர்களில் பெரும்பாலோர் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள இஷ்டமில்லாமலே, நமது ஸமூஹங்களில் கலந்துகொண்டுதான் வருகிறார்கள். இவர்களைப்பற்றி நமது ஸமூஹத்தில் ஒரு பேச்சும் கிடையாது. அபேக்ஷிப்பவர்களுக்கோ நாம் ப்ராயச்சித்தம் விதிப்பதில்லை. நான்காவது வர்ணத்தில் சேர்ந்த சூத்ரரிடம் ஸேவகர்களாயுள்ள ப்ராம்மணனுக்கு போதாயனாதிகள் மூன்று வர்ஷ ப்ராயச்சித்தம் விதித்திருந்தால் சாதுர்வர்ண்யத்தில் சேராத ம்லேச்ச ஹூணுதி ஸேவைக்கு எவ்வளவு ப்ராயச்சித்தமிருக்குமோ தெரியவில்லை. இதையெல்லாம் கால ஸ்வபாவத்தை யநுஸரித்து நாம் ஒப்புக்கொண்டிருக்க, "அகப்பட்டுக்கொண்டவனுக்கு அஷ்டமத்தில் சனி" என்கிறபடி பரம அநுதாபத்துடன் ஒருவர் ப்ராயச்சித்தம் செய்துகொண்டால் அவரைத் தாரதியடிப்பது தான் நாம் செய்யும் தர்மரக்ஷணம்போலும்!! ஆகவே இஞ்சிமேடு ஸ்வாமி மற்ற விஷயங்களுக்கெல்லாம் காலாநுகுணமாக இருக்கவேண்டியதை அறிந்து இருப்பதுபோல், இந்த விஷயத்திலும் இருப்பது நியாயமாயும் கௌரவமாயிருக்குமென்பது அடியேனுடைய விஜ்ஞாபநம்!!!!

கும்பகோணம். கே. எஸ். ஸ்ரீனிவாஸாசாரியன்.

---

1. ஸமுத்ரஸம்யாநம் ப்ரஹ்மஸ்வந்யாஸ ஸாக்ஷ்யம் — ஶூத்ரஸேவநம் — இத்யாதி (த்ரி)வர்ஷபதநீயானி ... யதேகராத்ரேண கரோதி பாபம் க்ருஷ்ணவர்ணம் ப்ராஹ்மண ஸேவநாத் । தத்த்ரயேண வ்யபோஹதி த்ரிவர்ஷைர் ... வாபம் ॥ க்ருஷ்ணம் - வர்ணம் । ஶூத்ரவர்ணம்.
போதாயந ஸூத்ரம் 2—50—54.

ச்ராத்தம்.

(காடந்தேத்தி - கோபாலாசார்யர்.)

ஸுசீலன்:— நிரம்ப நன்றாயிருக்கிறது. உன் நாஸ்திக வாதத்திற்கிணங்க ராமாயணத்தையும் ஸம்வாதிக்கிறாய் போலும். நீ ராமாயணங்கேட்ட விடத்திற்கு அடுத்த இடத்தில் ஸமாதானத்தைக் கேட்டிருந்தால் உனக்கு ஸமாதானம் நன்கு விளங்கும்; நீ அதைக் கேட்கவில்லை.

ஸுகுணன்:— அதெப்படி! விளங்கச்சொல். அடுத்த பிரகரணத்தைச்சொல்.

ஸுசீலன்:— ஸ்ரீராமன் வனவாஸத்திலேயே ஊற்றமுள்ளவராயிருந்ததைப் பார்த்து எவ்விதத்திலும் ஸ்ரீராமனை அயோத்யையில் பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டுமென்று ஆஸ்தாவிசேஷத்தால் அஹ்ருதயமாய்ச் சொன்ன வார்த்தையேயன்றி, வாஸ்தவமான தாத்பர்யம் அவ்விதமில்லையென்பது; இந்த வார்த்தையைக்கேட்டுக் கலங்கி, கோபத்துடன் இப்படிப்பட்ட மந்திரிகளைச் சேர்த்த பிதாவினத்திலல்லவோ தவறுதல், இப்படிப்பட்டவர்களை ஸப்யர்களாக எப்படிச் சேர்த்தார் என்று அருளிச்செய்த சக்ரவர்த்தித் திருமகனுக்கு (2) ஜாபாலியென்கிற மகர்ஷியும் லோகங்களுடைய கதாகதங்களைத்தெரியவல்லராமவர் என்று வஸிஷ்ட மஹர்ஷி ஸமாதானமுரைத்த ஸந்தர்ப்பத்தைச் சரியாய் அறிந்தால் நன்கு விளங்கும்.

இது நிற்க, நீ கேட்டதற்கு லோக ந்யாயத்தைக்கொண்டும் பதிலுரைக்கிறேன். நம்முடைய இஷ்டனை ஒருவனுக்கு நாம் சில திரவியங்களை மணியார்டர் மூலமாக அனுப்புகிறோம். சீமையிலிருக்கும் அவனுக்கு இந்தத் திரவியம் இங்கே சிலாமணியாகும் நாணயமாகவே அவனுக்குக் கிடைக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. அங்கே வழங்கிவருகிற நாணயமாக மாறி அவனை அடைகிறது என்பதைப் பார்க்கவில்லையா. அதுபோல இவ்விடத்தில் லோகாந்தரத்திலிருக்கிற பிதிர்க்களைக் குறித்து (கவ்யம்) தேவதைகளுக்குக்கொடுக்குமது (ஹவ்யம்) இவைகளைப் பிராம்மணர் மூலமாக உபயோகித்தால் அதினாலேயே பிராம்மணர்களை அதிஷ்டானம் பண்ணுகிற பிதிர்க்கள் திருப்தி யடைகிறார்கள் என்பதில் உனக்கு என்ன ஆக்ஷேபம் உளது. இந்த

---

1. ஸ்ருஷ்டிகா பித்ரு தைவத்யம் ப்ராஹ்மணேஷு ... । ... ஸர்வதோ ஹி ... ஸ்ரீமத்ராமாயணம் அயோத்யாகாண்டம்.
2. ஜாபாலிரபி ஜாநீதே லோகஸ்யாஸ்ய கதாகதிம்.
ஸ்ரீமத்ராமாயணம் அயோத்யா காண்டம்.

186742

விஷயத்தை யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியில் (1) வ்யாக்யானம் செய்யவந்த விஜ்ஞாநேச்வரர் என்பவரே ப்ரசங்கித்து ஸமாதானம் சொல்லியிருக்கிறார். அது பின் வருமாறு:—

தங்கள் தங்களுக்கு அநுகுணங்களாய்ப் புண்ய பாப ரூபங்களான கர்மங்களைச் செய்து ஸ்வர்க்கத்தையோ நரகத்தையோ அடைந்தவர், தங்கள் புத்திரர்களினால் கொடுக்கப்படும் அன்னபாநாதிகளினால் திருப்தியடைவதெங்ஙனே. திரும்பவும் இவ்வுலகில் ஜனனமில்லாமையால் அவர்கள் நேராகவந்து அதைப்பெறும் வண்ணம் எவ்விதம். அப்படி திருப்தியடைகிறார்களென்று ஒப்புக்கொண்டாலும் தங்கள் காரியத்திலேயே அசக்தர்களான அவர்கள் ஸ்வர்க்கமுதலிய பலங்களைப் புத்திரர்களுக்குக் கொடுப்பதென்பதும் எப்படி பொருந்துமெனில், நம்மால் செய்யப்படும் ச்ராத்தத்தில் உத்தேச்யர்களாகச்சொல்லப்பட்டவர்களான பிதிர்க்கள் தேவதத்தனென்றும் யஜ்ஞதத்தனென்றும் சப்தத்தினால் மாத்திரம் சொல்லப்படுகிறவர்கள் அன்று அதிஷ்டான தேவதைகளுடன் கூடிய அந்த பிதிர்க்களே தேவதத்தன் முதலிய சப்தத்தினால் வ்யவஹரிக்கப்படுகிறார்கள். அந்த அதிஷ்டான தேவதைகள் தான் வஸுவென்றும், ருத்திரனென்றும், ஆதித்யனென்றும் வ்யவஹரிக்கப்படுகிறார்கள். அந்த வஸு ருத்ர ஆதித்யர்களைக் குறித்து (பித்ருபிதாமஹப்ரபிதாமஹர் என்கிற பிதிர்க்களின் பெயர் கோத்திரம் இவைகளைச் சொல்லி ச்ராத்தத்தில் கவ்யத்தைக்கொடுத்தால், ச்ராத்தத்தில் தேவதைகளான அவர்கள் திருப்தி அடைந்து தேவலோகத்தை அடைந்திருக்கும் பிதிர்க்கள் பித்ருலோகத்தை அடைந்திருந்தாலும் நரகத்தை அடைந்திருந்தாலும் அவர்களைத் திருப்தி செய்விக்கிறார்கள். எப்படி தாய், கர்ப்பத்தை வளரச் செய்வதற்கு அன்னியர்களால் கொடுக்கப்பட்ட அன்னபானம் முதலியவைகளால் தான் திருப்தி அடைந்து தன் வயிற்றிலிருக்கும் குழந்தைகளை ஸந்தோஷிப்பிக்கிறாளோ, தம்மசக்கையைப் போக்கடித்துக் குழந்தையை வளரச்செய்வதற்குத் தகுதியான ஆகாரத்தை ஊட்டினவர்களுக்கும் ப்ரத்யுபகாரங்களைச் செய்கிறாளோ, அப்படித்தான் வஸுருத்ராதித்யாதிரூபர்களான பிதிர்க்க

1. வஸுருத்ராதிதிஸுதாஃ பிதரஃ ச்ராத்த தேவதாஃ। ப்ரீணயந்தி மநுஷ்யாணாம் பித்ரூந் ச்ராத்தேந தர்பிதாஃ ॥ ஆயுஃ ப்ரஜாம் தநம் வித்யாம் ஸ்வர்கம் மோக்ஷம் ஸுகாநி ச । ப்ரயச்சந்தி ததா ராஜ்யம் ப்ரீதா நந்ருணாம் பிதாமஹாஃ ॥ வஸவஃ பிதரோ ஜ்ஞேயாஃ ருத்ராச்சைவ பிதாமஹாஃ । ப்ரபிதாமஹாஸ்ததாதித்யாஃ ச்ருதிரேஷா ஸநாதநீ ॥

யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி.

ளும். ஆகையினால் அவர்களைக் குறித்து ச்ராத்தம் செய்தால் ஸந்தோஷிக்கிறார்கள். இப்படி ச்ராத்தம் செய்வதினால் தங்கள் பிதிர்க்கள்மட்டும் திருப்தியடைகிறார்களென்பது மாத்திரமில்லை. ச்ராத்தம் செய்தவர்களுக்கும் ஆயுஸ், ஸந்ததி, பணம், கல்வி,ஸ்வர்க்கம், மோக்ஷம், ஸுகம் இவைகளைக் கொடுக்கிறார்கள். செய்யாமல் போனால் சாபம் இடுகிறார்கள். ஆகையால் அந்த அந்தப் பிதிர்க்களுக்கு ஏற்பட்ட பெயர் கோத்திரம் இவைகளைச் சொல்லி வஸுருத்திராதித்யர் என்று இவர்களைப் பூஜிக்கவேண்டும். இப்படி வஸுருத்திராதித்யர்கள் இவர்களைக் குறித்துச் செய்யும் ச்ராத்தம் பகவதாராதனமாகவே முடியும். ஏனென்றால் (1) எவர்கள் பித்ருதேவதைகளையும் தேவர்களையும் ப்ராஹ்மணர்களையும், அக்னியையும் பற்றி யாகஞ் செய்கிறார்களோ, அவர்கள் ஸர்வ பூதங்களுக்கும் அந்தர்யாமியான விஷ்ணுவையே ஆராதிக்கிறார்களென்று சொல்லியிருப்பதினால், கோத்திரம் பெயர் இவைகளைச் சொல்லி வஸுருத்ராதித்யர்களைக் குறித்துச் செய்யப்படும் ச்ராத்தமும் அவர்களைச் சரீரமாகவுடைய எம்பெருமானுக்கே ப்ரீணனமாகிறபடியால் பகவதாராதனமென்னத் தட்டில்லை.

ஸுகுணன்:— பரமைகாந்திகள் பகவானுக்கே அஸாதாரணமாயுள்ள சப்தங்களைக்கொண்டு பகவானைக்குறித்து ச்ராத்தாதிகளைச் செய்யவேண்டுமென்று பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் மஹான்கள் சொல்லியிருக்கிறார்களே. அப்படியிருக்க, கோத்ரம் சர்ம இவைகளைக்கொண்டு வஸுருத்ராதித்யர்களைக்குறித்துச் செய்யப்படும் ச்ராத்தம் பகவதாராதனமாவது எப்படி? பரமைகாந்த்யத்துக்குப் பங்கமுண்டாகாதோ.

ஸுசீலன்:— அந்த ச்ராத்தம் பாஞ்சராத்ரத்தில் சக்ராப்ஜ மண்டலதீக்ஷை முதலிய ஸம்ஸ்காரங்களைப்பற்றின சில அதிகாரி விசேஷங்களைக்குறித்துச் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பதால் மற்றவர்களுக்குத் தங்கள் தங்கள் க்ருஹ்யங்களிலும் கல்ப ஸூத்ரங்களிலும் சொல்லியவாறு அநுஷ்டிக்கவேண்டும். அப்படி அநுஷ்டிக்குமிடத்தில் பரமைகாந்த்யபங்கமுண்டாக வேண்டுவதில்லை. ஆகையால் த்ரைவித்யர்களான பரமைகாந்திகள் கோத்ரம் பெயர் இவைகளைச் சொல்லிக்கொண்டே பித்ருக்களைக்குறித்து ச்ராத்தம் செய்தாலும் அது அந்த அந்த பித்ருக்களைச் சரீரமாக உடைய எம்பெருமானுக்கு ஆராதனமென்பதில் ஐயமில்லை. அபிஸந்திபேதமே அதற்குக்காரணம். அவ்விதமே சிஷ்டர்களின் ஆசாரமும் உளது.

ஸுகுணன்:— பித்ரு தேவதைகள் யாவர், அவர்கள் எவ்விதம் பிண்டத்தைப் புஜிக்கிறார்கள். ம்ருதர்களான அவர்களுக்கு இவர்களிட்ட அன்னபானாதிகளில் திருப்தி உண்டாவதெங்ஙனம்? இந்த விஷயத்தில் எனக்கு ஸம்சயம்.

1. யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாசநாந் । ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே । தக்ஷஸ்ம்ருதி.

ஸுசீலன்:—இதற்குப் பதில் கீழே சொல்லப்பட்டது. மறுபடியும் சொல்லுகிறேன். தேவதைகள் ஹவ்யங்களினால் திருப்தியடைகிறார்கள்; பித்ருக்கள் கவ்யத்தால் திருப்தியடைகிறார்கள். ப்ரசஸ்தமாயும் மங்களமாயுமுள்ள த்ரவ்யங்களைக்கொண்டு ஹவ்யம் விதிக்கப்படுகிறது. தேவதைகள் அஸுரர்கள் கந்தர்வர்கள் இவர்கள் பித்ருக்களைப் பூஜிக்கிறார்கள். ச்ராத்தத்தில் சந்தோஷத்தை அடைந்த தேவர்கள் பித்ருக்கள் புத்ரர்களை ஸந்தோஷிக்கச் செய்கிறார்கள். உலகங்களில் பித்ருக்கள் பூஜ்யர்கள்; தேவதைகளுக்கும் தேவதைகள். அன்யர்களைப் பரிசுத்தி செய்விக்குமவர்கள். தாங்களும் பரிசுத்தமானவர்கள். நினைத்த மாத்திரத்தினால் புண்யத்தை உண்டுபண்ணுமவர்கள். தெற்குத்திக்கில் வாஸம் செய்கிறார்கள். இந்தப் பித்ருக்கள் வஸுவென்றும் ருத்ரனென்றும் ஆதித்யனென்றும் சொல்லப்படுகிறார்கள். சிராத்தம் செய்யுமவன் வஸ்வாதி பித்ருக்கள் தான் போக்தாக்கள் என்று ச்ராத்தம் செய்யவேண்டும். அதினால் தன்னுடைய பித்ருக்களும் திருப்தியடைகிறார்கள். இப்படிப்பட்ட ச்ராத்தத்திற்குத் தங்கள் பித்ருக்களின் திருப்தியும் ஸ்வர்க்கம், ஆயுஸ், ஸந்ததி, பொருள், ஸ்த்ரீ, வாஹனம் இவைகளும் பலம். இப்படிச்சொல்லப்பட்ட பலத்தை விரும்புகிறவன் வஸு ருத்ராதித்யர்களை குறித்துச் செய்யப்படும் ச்ராத்தத்தில் அதிகாரி. அப்படி அநுஷ்டிக்கப்பட்டாலும் அந்தத் தேவதைகளைச் சரீரமாக உடைய எம்பெருமான் திருவுள்ள வுகப்பை நினைத்துச் செய்யப்படுவதால் பாரமைகாந்தியத்துக்குப் பங்கம் உண்டாகவேண்டுவதில்லை. இந்த அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆஸையிருந்தால் மஹாபாரதத்தில் அநுசாஸன பர்வத்தில் 216-வது அத்யாயத்தைப் படித்துப்பார்த்தால் அர்த்த தத்வம் விளங்கும். இந்த விஷயத்தில் உனக்கு ஸந்தேஹம் வேண்டாம். இப்படியே (1) பித்ருதேவதைகள் ஆதியில் ஏற்பட்ட தேவதைகள். அவர்களை ச்ராத்தத்தினால் திருப்தி செய்விக்கவேண்டும். சாமகோத்திர ஆவைகளைச்சொல்லிப் பித்ருக்களை ச்ரார்த்தங்களினால் திருப்தி செய்வித்தால் அவர்கள் தேவதைகளால் பூஜிக்கப்படும் சந்திரனை யோக பலத்தினால் பிரவேசித்துக் கவ்யங்களைக்கொண்டு அம்ருதாம்சத்தை வ்ருத்தி செய்கிறார்கள்.

---

1. [illegible] ஹரிவம்ஶம் । [illegible]

ச்ருதி ப்ராமாண்யம்.

(ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி, பி. ஏ.)

அதர்வணம் வேதமா அல்லவா?

இவ்விடத்தில் சிலர் ஆக்ஷேபிப்பதாவது:—

'த்ரயீ' என்றால் மூன்று வேதங்கள் என்றுதான் அர்த்தம். அதாவது முன்காலத்தில் ருக் — யஜுஸ் — ஸாம என்று மூன்றே வேதங்கள் இருந்தன. அதர்வணவேதம் முதலில் இல்லை. அதனாலன்றோ வேதங்களுக்கு த்ரயீ என்று பெயர்வந்தது.' ஆகையால் மிகவும் பழைய க்ரந்தங்களில் 'த்ரயீ' என்ற பெயர் வேதங்களுக்கு வழங்கிவந்தது. 'அக்நே: ருசோ வாயோ: யஜூம்ஷி ஸாமாந்யாதித்யாத்' (அக்னியிலிருந்து ருக்வேதமும் வாயுவிலிருந்து யஜுர்வேதமும் ஆதித்யனிடமிருந்து ஸாமவேதமும் உண்டாயின). 'ஸ ஏதாம் வித்யாம் த்ரயீம் அப்யதபத்' என்று சாந்தோக்ய ப்ராஹ்மணத்திலும்,

'அக்நிவாயுரவிப்யஸ்து த்ரயம் ப்ரஹ்ம ஸநாதநம் ।
துதோஹ யஜ்ஞஸித்த்யர்த்தம் ருக்யஜுஸ்ஸாமலக்ஷணம் ॥'

(ருக் யஜுஸ் ஸாம என்கிற புராதனமான வேதங்களை முறையே அக்னி வாயு ஸூர்யன் இவர்களிடமிருந்து கறந்தார்) என்று மநுஸம்ஹிதையிலும் ஆகிய இது முதலிய பழைய க்ரந்தங்களில் த்ரயீ என்ற பெயர் வேதத்திற்கு வழங்கிவந்தது. ஆனால் சாந்தோக்யாதிகளுக்குப்பிறகு ஏற்பட்ட நவீந க்ரந்தங்களிலோவென்றால் வேதங்கள் நான்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் அப்போது அதர்வவேதம் எழுதியாய்விட்டது. உதாஹரணமாய் 'அஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதமேதத் யத்ருக்வேதோ யஜுர்வேதஸ்ஸாமவேதோ(அ)தர்வாங்கிரஸ:' என்று ப்ருஹதாரண்யகத்திலும், 'சத்வாரோ வேதா: பாரதம் சைததேகத: । புரா கில ஸுரைஸ்ஸர்வைஸ் ஸமேத்ய துலயா த்ருதம் । சதுர்ப்யஸ் ஸரஹஸ்யேப்யோ வேதேப்யோ ஹ்யதிகம் யதா । ததா ப்ரப்ருதி லோகேஸ்மின் மஹாபாரதமுச்யதே ॥' (முன்பு ஒருகாலத்தில் தேவர்களனைவரும் சேர்ந்து நான்கு வேதங்களை ஒரு தராசுத்தட்டிலும் பாரதத்தை மற்றொருதட்டிலும்வைத்து நிறுத்துப் பார்த்ததில் ரஹஸ்யங்களோடு கூடிய நான்கு வேதங்களைக்காட்டிலும் பாரதம் அதிகமாயிருந்ததால் அதற்கு மஹாபாரதம் என்று பெயர்வந்தது) என்றும்,

'[illegible] வேதாஞ் சதுரோ [illegible]
[illegible] ॥

(அங்கங்களோடும் உபநிஷத்தோடும் கூடியதாயிருக்கும் நான்கு வேதங்களை அறிந்தும் இந்த மஹாபாரதத்தை எவன் அறியவில்லையோ அவன் தெளிய க்கற்றவன் அல்லன்) என்று பாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் 'த்ரயீ' என்னும் சப்தத்தினால் ருக் யஜுஸ் ஸாமா வைத்தான் சொல்லவேண்டும். அதர்வவேதம் பிற்பாடு ஏற்பட்டதால் அது உபசாரமாக வேதம் என்று சொல்லப்படுவதே யல்லாமல் வாஸ்தவத்தில் அது வேதத்தில் சேரவில்லை என்று.

இந்தவாதம் அஸமஞ்ஜஸமாயும் நிர்மூலமாயு மிருக்கிறது. 'த்ரயீ' என்கிறபெயரே 'வேதங்கள் மூன்றுதான் இருந்தன' என்று சொல்வதற்குக்காரணமாகாது. ஏனெனில் முற்கூறியபடி மூன்றுவித ரசனைகளோடு கூடியதால் த்ரயீ என்றபெயர் வழங்கிவந்தது என்கிற காரணம் எப்போதும் வஹித்தமாயிருக்கிறது. ஆகையால் நான்கு வேதங்களையும் த்ரயீ என்று சொல்லத்தட்டில்லை. ஆனதுபற்றியே ஸாமவேதத்தில் ருக்குக்களுடையவும் யஜுஸ்ஸுக்களுடையவும் பாடங்கள் காணப்படுகின்றன. அவ்விதமே யஜுஸ்ஸுக்களிலும் ருக்குக்களின் பாடங்கள் காணப்படுகின்றன. இதை ஸர்வாநுக்ரமணீ வ்ருத்தியில் '[illegible] '' என்று சொல்லுகிறார்! மேலும் சாந்தோக்யம் முதலிய ப்ராசீன க்ரந்தங்களில் மட்டுமே த்ரயீ என்கிற வ்யவஹாரம். அவைகளுக்குப் பிறகு உண்டான ப்ருஹதாரண்யகாதிகளில் அப்படியில்லை என்று சொன்னதும் சரியல்ல. ஏனென்றால்:— சாந்தோகயத்திலேயே '[illegible] என்றும்' மனுஸம்ஹிதையில் '[illegible]' '[illegible]' என்றும், [illegible] என்றும், மஹாபாரதத்தில் '[illegible]' '[illegible]' '[illegible]' என்றுஞ்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் எந்த க்ரந்தத்தில் வேதங்கள்நான்கு என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விடத்திலேயே த்ரயீ என்றும், எங்கே த்ரயீ என்று காணப்படுகிறதோ அங்கே வேதங்கள் நான்கு என்றும் சொல்லியிருப்பதால் பூர்வ பக்ஷியின் வாதம் சரியல்ல. ஆனதுபற்றி வாஸதவத்தில் ஒன்றாயிருக்கும் வேதமானது மூன்றுவித ரசனையுடையதாயிருப்பதால் த்ரயீ என்று ப்ரஸித்தியடைந்து கொண்டு, ருக்ஸம்ஹிதை யஜுஸ் ஸம்ஹிதை ஸாமஸம்ஹிதை அதர்வஸம்ஹிதை என்கிற நான்கு ஸம்ஹிதைகளால் நான்கு என்று சொல்லப்படுகிறது.

சுருதி நித்யமும் அபௌருஷேயமுமானது.

இவ்விதம் ப்ரமாணங்களாக நிரூபிக்கப்பட்ட த்ரயீ என்கிற நான்கு வேதங்களும் நித்யஸித்தங்களாய் அபௌருஷேயங்களா யிருக்கின்றன. ஏனென்றால் சப்தத்திற்கும் (பதத்துக்கும்) அர்த்தத்திற்கும் சம்பந்தம் ஸ்வபாவத்தில் ஏற்பட்டது. அக்நி, ஜலம் முதலியவைகளுக்கு சூடு, குளிர்ச்சி முதலிய சக்திகளின் ஸம்பந்தம் எப்படி ஸ்வபாவமோ, கண்முதலிய இந்திரியங்களுக்கு ஜ்ஞான விசேஷத்தை உண்டாக்கும் சக்தியானது எப்படி ஸ்வபாவமோ அப்படியே சப்தத்திற்கும் அர்த்தத்தைப் போதிக்கும் சக்தி ஸ்வபாவத்தில் ஏற்பட்டது. சப்தத்தை உச்சரித்த மாத்திரத்தினால் அதின் அர்த்தம் அறியப்படுகிறது. அர்த்தத்தைவிட்டுத் தனியாக சப்தம் நிற்காது. சப்தத்திற்கு ஆதாரம் ஆகாசம். சப்தத்திற்கு ஸூக்ஷ்ம ஸ்திதி யென்றும் ஸ்தூல ஸ்திதி யென்றும் ஆக இரண்டு நிலைகளுண்டு. உலகத்திலுள்ள எல்லாவஸ்துக்களுக்கும் ஸ்தூல ஸூக்ஷ்ம நிலைகளுண்டு. அவ்வாறே சப்தமும் இரண்டு அவஸ்தையோடு கூடியது. ஸ்தூலாவஸ்தையாவது நாம் காதால் கேட்கும்போது அபிவ்யக்தமா யிருக்கும் (வெளியிடும்) அவஸ்தை. நாம் பேசும்போது இல்லாத சப்தத்தைப் புதிதாய் உண்டாக்குவதில்லை. ஏற்கெனவே இருக்கும் சப்தத்தை வெளியாக்குகிறோம். அப்படி நாம் வெளியாக்குவதற்குமுன் சப்தமானது ஸூக்ஷ்ம ரூபமாய் ஆகாசத்திலிருக்கிறது. வெயிற் காலத்தில் மிகவும் ஸூக்ஷ்மமாயிருக்கும் வாயுவை, விசிறி முதலிய கருவியை அசைப்பதால் ஸ்தூலமாக்குவது போல ஆகாசத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும் சப்தத்தை நாம் நமது வாக்கு இந்திரியமாகிய கருவியால் அபிவ்யக்தமாக்குகிறோம். நவீநயந்திரமான (Phonograph) போனேக்ராப் கருவியால், சப்தத்திற்கு ஸூக்ஷ்மாவஸ்தை உண்டென்பது நன்கு விளங்கும். மேல்நாட்டவர்கள் புதியதாய்க் கண்டுபிடித்ததாகச் சொல்லிவரும் ஒவ்வொரு விஷயங்களும் நமது பூர்விகர்கள் வேதத்திலிருந்து சொல்லியிருக்கும் விஷயங்களை த்ருடமாய் ஸ்தாபிக்கின்றன வென்பதற்கு இந்த சப்தாநுகரணயந்த்ரம் நமக்கு ஓர் திருஷ்டாந்தம். இந்தப் போனோக்ராப் யந்திரத்தின் உருளையில் ஸூக்ஷ்ம ரூபமாய் அடங்கியிருக்கும் நாதமே, உருளை சுற்றிவரும்போது நமது காதுக்குக் கேட்கும்படியான ஸ்தூல நிலைமையடைகிறது. அதாவது ஆகாசத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும் நாதத்தை இந்தக் கருவியானது வாகிந்திரியஸ்தானத்திலிருந்துகொண்டு வ்யக்தமாக்குகிறது. ஆகையால் லோகத்திலுண்டாகும் வ்யக்தமான சப்தங்களெல்லாம் உச்சாரணம் செய்து ஓய்ந்தபிறகு ஆகாசத்திலேயே ஸூக்ஷ்ம

மாய் ஒடுங்கியிருக்கின்றன. இதை நாம் ஆராய்ச்சி செய்தால் நமது காதுக்குப் புலப்படாததாக ஸூக்ஷ்ம ஸ்திதியில் கோடிக் கணக்காய் சப்தங்கள் ஆகாசத்திலிருக்கின்றன வென்று ஏற்படுகிறது. அக்ஷரரூபமான சப்தங்கள், அக்ஷரங்களின் முன்பின் க்ரமத்தை அனுஸரித்து ஸூக்ஷ்மரூபமாகப் பதிந்திருக்கின்றன. ஸ்தூல சப்தத்தின் அக்ஷர க்ரமப்படியே இருக்கின்றன. ஆனால் அந்த சப்தங்கள் யாவற்றையும் கேட்பதற்கு நமக்குச் சக்தியில்லை. சக்தியில்லாத காரணத்தினாலேயே அந்த சப்தங்கள் ஒன்றுமில்லை யென்றும், ஆகாசம் சூன்யமாயிருக்கிறதென்றும் சொல்லத்தகாது. சக்தி விசேஷத்தாலும், அப்யாஸ பாடவத்தாலும் அந்த ஸூக்ஷ்மமான சப்தங்களை ஸ்தூல சப்தங்கள் போல் திவ்யயோக ஸித்தியடைந்த மஹர்ஷிகள் கிரஹித்திருக்கிறார்கள். அநேகமாயிரம் தூரத்திற்கப்பால் மற்றவர்கள் பேசிக்கொண்ட ஸம்பாஷணைகளை யோக ப்ரபாவத்தால் அறிந்து சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஸர்வவியாபியான ஆகாசத்தில் ஸூக்ஷ்மமாயிருந்ததையே அறிந்து சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் ஏகாக்ர சித்தர்களாகக் காதுக்கும் ஆகாசத்துக்குமுள்ள ஸம்பந்தத்திலேயே புத்தியை நாட்டி அப்படியே ஆவ்ருத்தி செய்து அப்யாஸ மஹிமையினால் பெறும் ஸித்தியை திவ்யச்ரோத்ரம் என்பார்கள். இதைத்தான் பதஞ்சல மஹர்ஷியானவர், 'ச்ரோத்ராகாசயோ: ஸம்பந்தஸம்யமாத் திவ்யம் ச்ரோத்ரம்' என்று யோகஸூத்ரத்தில் கூறியிருக்கிறார். இத்தகைய திவ்ய யோக ப்ரபாவத்தால் மஹர்ஷிகள் அநாதியான வேதங்களை அபிவ்யக்தமாக்கி யிருக்கிறார்கள். இதையே ஸ்ரீவேதவ்யாஸரும், 'யுகாந்தே(அ)ந்தர்ஹிதாந் வேதாந் ஸேதிஹாஸாந் மஹர்ஷய: । லேபிரே தபஸா பூர்வமநுஜ்ஞாதா: ஸ்வயம்புவா ॥' (முன்பு யுகாந்தத்தில் மஹர்ஷிகள் ஸூக்ஷ்மமாய்ப் பதிந்திருந்த வேதங்களை ப்ரும்மாவின் அருளால் தபோமஹிமையினால் கண்டுபிடித்தார்கள்.) என்று சொன்னார். ஸ்ரீ பாஷ்யகாரரும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில், 'வேதாநாம் அநந்தத்வாத் துரவகாஹத்வாச்ச பரமபுருஷநியுக்தா: மஹர்ஷய: கல்பே கல்பே நிகிலஜகதுபகாரார்த்தம் வேதார்த்தம் ஸ்ம்ருத்வா ஸ்ம்ருத்வா விம்சதி தர்மசாஸ்த்ராணி இதிஹாஸபுராணாநி ச சக்ரு:' (வேதங்கள் அனந்தங்களானதாலும் எளிதில் அறியமுடியாததாலும் ஸமஸ்த ஜகத்துக்கும் உபகாரார்த்தமாய்ப் பரமபுருஷனால் ஏவப்பட்ட மஹர்ஷிகள் ஒவ்வொரு கல்பத்திலும் வேதார்த்தங்களை நினைத்து நினைத்துத் தர்ம சாஸ்திரங்களையும் இதிஹாஸ புராணங்களையும் செய்தார்கள்.) என்று அருளிச்செய்தார்.

ஸ்ரீ.

அபியுக்தர்களுக்கோர் விஜ்ஞாபனம்.

தற்கால நிலைமையில் நமது ஸமூகம் சீர்குலைந்து இருப்பதை ஒவ்வொரு ஸாத்விக புருஷர்களும் உற்றுநோக்கல் வேண்டியதவசியம். நாதமுனிகள் தொடக்கமான நமது ஸம்ப்ரதாயம் நமது ஸமூகத்திற்கேயன்றி பிறசமூகத்திற்கும் மொத்தத்தில் இந்நிலவுலகே உஜ்ஜீவிப்பதற்கும் பிரதான உறுப்பாய் விளங்கிவந்தது. ஆங்கில ஆட்சி யேற்பட்ட காலந்தொட்டு மதசுதந்திரம் காப்பாற்றப்பட்டதாகக் கருதப்பட்டபோதிலும், உண்மையில் ஆரம்பம் முதல் கல்வி முறைப்பிசகினால் நமது ஸம்பிரதாயஸ்தர்களும் நமது ஸமூஹத்தவர்களும் ஆங்கில பாஷாப்யாஸ மகிமையினால் நமது வித்யை, நமது கொள்கை, நம் பெரியோர்களின் சரித்திரம் முதலியவைகளில் அவிச்வாஸம் கொண்டு நம்பூர்விக ஸத்ஸம்பிரதாய மகிமையை மறந்து, அர்த்தகாமபரர்களாய் ராஜாங்க உத்யோகப்பதவியையே பெரும்பேறாக நினைத்து நமது சித்தாந்தத்திற்கே உரித்தான ஒழுக்கங்களைக்கை விடுவதால் மதசுதந்திரத்தை இழக்கலாயினர். அதற்கு மூலகாரணம் நமது சமூகக்கட்டுப்பாட்டின் குறைவே. கலிபுருஷனின் விஹாரதோரணையினால் காலம் விரைவில் மாறுதல் அடைந்து வருகிறது. இனியும் நாம் சமூகக் கட்டுப்பாட்டை யேற்படுத்திக் கொள்வதின் மூலமாய் நமது பொன்னேபோற் போற்றத்தக்க சீரிய சித்தாந்தார்த்தங்களின் உண்மைகளை ஜனஸமூஹத்தினிடையே பரவச்செய்யாது உறங்கிக் கிடப்போமானால் நாம் நமது சம்பிரதாயத்திற்கும் நமது சந்ததியார்களுக்கும் பெருந்தீங்கை உண்டாக்கியவர்களாவோம் என்பதில் என்ன சம்சயமிருக்கிறது. (ஸங்கே சக்தி: கலௌ யுகே) சங்க சக்தியுள்ள இக்கலியில் சங்கங்களின் மூலமாய் வர்ணாச்ரமாசாரங்களை நிலை நிறுத்தி நம் ஸமூஹத்திடையேயும் பிறஸமூஹத்திடையேயும் அநாவசியமாய் விபரீத இயக்கங்களினாலும் பிரசாரங்களினாலும் உண்டாயிருக்கிற பரஸ்பர த்வேஷ புத்திகளையொழித்து ஸாமரஸ்யத்தை யூட்டி, ஒவ்வொரு ஸமூஹத்தையும் பகவானின் அபார கிருபைக்குப் பாத்திரமாக்கவேண்டியது பெரியோர்களின் கடமை. அது தான் எம்பெருமானுக்கும் ஏனைய பூர்வாசார்யர்களுக்கும் திருவுள்ளம் உகக்கச் செய்யத்தகுந்த முக்ய கைங்கர்யம். சில சிஷ்டாக்ரேஸர்கள் தாங்கள் தனியாக ஒதுங்கி நின்று பகவதாஜ்ஞாநுஜ்ஞா கைங்கர்யங்களைச் செய்துகொண்டு பகவத் கிருபைக்குப் பாத்திரர்களாகி மோக்ஷமடைந்து விடலாமென்று நினைக்கிறார்கள். அப்பெ

ரியோர்கள் பகவானின் ஸங்கல்பம் என்ன என்பதை ஆலோசிக்கவேண்டும். ஜனங்களில் ஒருவனோ அல்லது ஒரு ஸமூகமோ மட்டும் மோக்ஷமடைவதில் பகவானுக்கு அவ்வளவு திருப்தியில்லை. எல்லாஜனங்களும் மோக்ஷம் அடையவேண்டுமென்பதே பகவானின் திருவுள்ளம். ஆகையால் ஒருவனோ ஒரு ஸமூஹமோ தனது உபாயபூர்த்தியினால் மோக்ஷத்தை யடைந்து விட்டால் அது ஸ்வார்த்தமாகுமே தவிர பரார்த்தமாக மாட்டாது. அதனால் பகவானுக்கு மோக்ஷமடைந்தவனைப்பற்றிய சந்தோஷம் சிறிது மேற்பட்டாலும் மோக்ஷமடைய ப்ரயத்னமே செய்யாது அஜ்ஞான சாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் ஆத்மகோடிகளைப்பற்றிய சிந்தை அவன் மனதை விட்டகலாது. ஒரு தகப்பன் தனது நூறு பிள்ளைகளை இழந்துவிட்டான். இழந்த பிள்ளைகள் இடருற்றுத் தவிக்கும் காலத்தில் அதில் ஒரு பிள்ளை இடர்வந்த காரணத்தையும் அதைப்போக்கடித்து முன்போல் தகப்பன் ஸாந்நித்யத்தை அடைவிப்பிக்கக்கூடிய உபாயத்தையும் அறிந்தானாகில் தான் அறிந்த உண்மையைத் தன் அரிய ப்ராதாக்களினிடையே எடுத்துக் காட்டி அவர்களையும், தன்வழி கூட்டி ஒருமிக்கத் தகப்பன் ஸாந்நித்யத்தை யடைந்தானானால் அதனால் உண்டாகும் பிள்ளைகளின் பரஸ்பர மகிழ்ச்சிக்கும், தகப்பன் ஆனந்தத்திற்கும் அளவெடுத்துரைக்கமுடியுமா? அங்ஙனமன்றி அறிந்த ஒருபிள்ளை ப்ராத்ரு வாத்ஸல்ய சூந்யனாய்த் தனது அறிவின் பலத்தினால் பிதாவைத் தான்மட்டும் அடைந்துவிட்டால், பிதாவுக்கு எவ்வளவு ஆனந்தம் ஏற்படும் என்பதையும் அறிஞர்களே ஊகித்தறிந்துகொள்ளக் கூடும். பகவான் தான் நேராக ஸர்வாத்மாக்களையும் தனது அனுக்ரஹத்தினாலும், நிக்ரஹத்தினாலும் ரட்சித்து, மோட்சம் அடையும்படி செய்ய எவ்வளவு கஷ்டங்களை யேற்றுக்கொண்டிருக்கிறான் என்பது பகவானின் ஸ்வரூபம், சிருஷ்டி வைபவம், அவதார வைபவம், அதன் பலாபலன்கள் முதலியவைகளின் ஸூக்ஷ்மார்த்தங்களை அறிந்த பெரியோர்களுக்கு எளிதில் புலப்படும் விஷயம். ஆகையால், பகவத்பக்தி பரிதர்களான ஸாத்விகர்கள் தமது ஆத்ம ரக்ஷணத்தைத் தேடுவதுடன், தற்கால தேச விருப்பிற்கேற்றுப்போல் நமது ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த சங்கத்தை ஆதரித்து அஸத்யப் பிரசாரத்தினால் உண்டாகும் புத்தி மயக்கங்களை ஜனசமூகங்கள் அடையவொட்டாது தடுத்து நமது பூர்விக ஆசாரியர்களின் ஸநாதன தர்மத்தை நிலைநிறுத்த முன்வரவேண்டும் என்று அடியேன் விநயபூர்வகமாக ப்ரார்த்திக்கின்றேன்.

சொரையூர் - பெ. வ. ஸ்ரீநிவாஸாசாரியர்.

ஸ்ரீ:

இரண்டாந்திருவந்தாதி.

41. பொருளா லமருலகம் புக்கியல லாகா
தருளா லறமருளு மன்றே - யருளாலே
மாமறையோர்க் கீந்த மணிவண்ணன் பாதமே
நீமறவே னெஞ்சே நினை.

(இ - ள்.) நெஞ்சே - மனமே! பொருளால் - பொருளைச் சாதனமாகக்கொண்டு அமரர் உலகம் - நித்ய சூரிகள் (நிரந்தரமாகப் பகவானை) அநுபவித்துக்கொண்டிருக்கிற மோட்ச லோகத்திலே, புக்கு இயலல் - போய்ச்சேர்ந்து தங்குதல், ஆகாது - (ஒருபோதும்) முடியாது; மா மறையோர்க்கு - (ஸம்ஸார ஸங்கத்தில் விரக்தராய்த் தன்னைப்பெற்று அநுபவிக்க வேணுமென்று இருக்கிற சுகர் வாமதேவர் முதலிய) பரமவைதிகர்க்கு, ஈந்த - (மோட்சத்தைக்) கொடுத்த, மணிவண்ணன் - நீலரத்நம்போலே (அநுபவிக்கத்தக்கதாய் ஸ்ரமஹரமான) வடிவையுடையவனான ஸர்வேஸ்வரனுடைய, பாதமே - திருவடிகளையே, மறவேல் - மறக்காதே நினை - (எப்போதும்) நினைத்தபடியே இரு; (அவ்வாறு இருந்தால்) அருளான் - பரமக்ருபாவானான அந்த ஸர்வேஸ்வரன், அறம் - ஸாக்ஷாத்தருமமான தன்னையே அருளும் அன்றே - தந்தருளுவா னன்றோ!

புருஷார்த்தங்களுள் ஒன்றாக மோட்சத்தைப் படிப்பதுபோலவே, அறம் பொருள் இன்பம் வீடு என்று பொருளையும் ஒரு புருஷார்த்தமாகப் படிக்கையாலே அர்த்தத்தைத் தேடுவதில் தம் மனஞ்செல்ல, அம்மனத்தை நோக்கி நீ அபேட்சிக்கின்ற செல்வத்தால் ஸாஸ்வதமான பரமபதம் ஸித்திக்காது; ஆகவே, அது ஸித்திக்கும்படி எம்பெருமானையே பற்றுவாய், என்று இவ்வாழ்வார் உபதேசிக்கின்றனரென்க. இம்பாசுரத்தில் 'நீர் நினையின், போகத்தால், பொருளில்லை' என்று உலகத்தார்க்கு உபதேசித்த உபதேசம் அவர்கள்திருந்துகைக்கு உடலாகாமல் தமது ஞானவைசத்யத்துக்கு உறுப்பாகவே; அதனால் தமது நெஞ்சைக்குறித்து உபதேசிக்க லாயினர். இந்தப்பாசுரத்துக்கு - க்ருபாவான பெருமானே நீ செய்கின்ற தர்மபலமான ஸ்வர்க்காதி லோகங்களையும் தருவான்: ஆனாலும், சாஸ்த்ரத்திலே பரமபதத்தைப்போலவே ச்லாக்யமாகச் சொல்லியிருப்பது கொண்டு பிரமாதிகளுடையனவான லோகங்களைப் பெறுவதற்கு முயலுதல் நமது ஸ்வரூபத்துக்குச் சேராது; ஆகவே, ஸ்வர்க்காதி லோகங்களில் நசையை யொழித்து எம்பெருமானது திருவடிகளையே நினை என்று உரைப்பினுமாம். மாமறையோர்க்கீந்த - தண்டகாரணிய வாசிகளான ருஷிகளுக்கு தன்வடிவை அநுபவிக்கத்தந்த என்றுமாம். 'மாமறையோர்க்கீந்த' என்ற பாடத்துக்கு - மார்க்கண்டேய முனிவனுக்கு நித்யத்வத்தைக் கொடுத்த என்று பொருளாம். அருளான் அருளும் - செய்யு மென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. 'அருளா லறமருளுமன்றே' என்றும் பாடமுண்டு. (௪௧)

42. நினைப்பன் றிருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார் - மனைப்பாற்

பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்ப மெல்லாந்
துறந்தார் தொழுதாரத் தோள்.

(இ - ள்.) திருமாலை - (இவ்வாத்மாவின் நன்மையையும் விருப்பத்தையும் தானும் தன்பதியுமாக நடத்திக்கொண்டு போகின்ற) பெரியபிராட்டியாரோடு கூடின ஸர்வேச்வரனுடைய நீண்ட தோள் - (அப்பிராட்டியின் ஸம்பந்தத்தாலே) அளவிறந்த போக்யதையையுடைய திருத்தோள்களை, காண - கண்டு அநுபவித்தற்கு, நினைப்பன் - நினையாநின்றேன்; (அப்படி நினைப்பது எதுக்காக என்னில்),—நினைப்பார் - இப்படி நினைப்பவர்கள், பிறப்பு ஒன்றும்-(அவ்வநுபவத்துக்குத் தடையாய் நிற்கிற) எவ்வகைப் பிறப்பையும், நேரார் - அடையமாட்டார்கள்; (மேலும்), அ - அந்த, தோள் - தோளை, தொழுதார் - தொழுபவர்கள், மனைப்பால் - ஓரோமனையிடத்து. பிறந்தார் - பிறந்தவர்கள், பிறந்து எய்தும் - (தாம்) பிறந்து அடைகின்ற, பேர் இன்பம் எல்லாம் - நிரவதிகமான ஸுகமெல்லாவற்றையும், துறந்தார்-விட்டிட்டவராவர். (எ-று.)

புறம்புள்ள ஸுகங்களைத்துறந்து ஸ்ரீமந்நாராயணனை அநுஸந்திக்குமவர்களே பிறவித்துயரத்தை யடையாது (அவ்வெம்பெருமானை யடைவராதலால், நானும் பிராட்டி புருஷகாரமாக ஸதா நிற்கும் அப்பரமனைத் தியானியாநின்றே னென்பதாம். இனி, இப்பாசுரத்திற்கு - இந்த ஆத்மா நினைப்பதொன்றையே பற்றுசு ஆகக்கொண்டு அவன் தானே தன்னைக் கொணர்ந்து காட்டினுள் காட்டுமேது தவிர, இஸ்ஸம்ஸாரத்திற் பிறந்தவர்கள் பிறந்து எய்துகின்ற மஹாஸுகங்களை யெல்லாந் துறந்து ஆர் அத்தோளைத் தொழுதார்? ஒருவரும் அவ்வாறு செய்தவர் இல்லை. ஆதலால், நானும் வைராக்கியம் இல்லாமற்போனாலும் அப்பெருமானைந் தோளைக்காண நினைப்பேனென்றுமாம். 'நீண்டதோள் காணத்திருமாலை நினைப்பன், என்கையாலே, ஸ்வர்க்காதிகளைப் பெற இவ்வாழ்வார் நசையுள்ளவரல்ல ரென்பதும். 'துறந்தார் தொழுதார்த்தோள், என்கையாலே, அவ்வெம்பெருமானது தோளழகுதானே மற்றுள்ள இன்பங்களைத் துறக்கும்படி பண்ணும் மென்பதும் பெறப்படும். இனி, பின்னிரண்டடிகட்கு - ஸாம்ஸாரிகமான ஸகலஸுகங்களையும் அருவருத்துத் துறந்தவர்களே அப்பரமனது தோள்களைத் தொழப்பெறுவாரென்று கூறலுமாம். 'பிறப்பென்றும், நேரார்' என்றும் பாடமுண்டு. (சஉ)

43. தோளிரண் டெட்டே ழுமூன்றும் முடியனைத்தும்
தாளிரண்டும் வீழச் சரந்துரந்தான் - தாளிரண்டும்
ஆர்தொழுவார் பாத மவைதொழுவ தன்றேயென்
சீர்கெழுதோள் செய்யுஞ் சிறப்பு.

(இ - ள்.) (பிராட்டியைச் சிறையில் வைத்து நலிந்த இராவணனுடைய), தோள் இரண்டு எட்டு ஏழும் மூன்றும் - இருபது தோள்களும், முடி அனைத்தும் - எல்லாத் தலைகளும், தாள் இரண்டும் - (இவைகட்கு ஆதாரமான) இரண்டு கால்களும், வீழ - அறுந்து விழும்படி, சரம் துரந்தான் - அம்புகளைச் செலுத்தின பெருவீரனான சக்ரவர்த்தித் திருமகனுடைய, தாள் இரண்டும் - இரண்டு திருவடிகளையும், தொழுவார் - தொழுவாராய், ஆர் - எந்த ஜந்ம வ்ருத்தங்களை யுடையவராயிருந்தாலும் (அஹங்காரம் அற்று இருக்கின்றவரான) அவருடைய, பாதம் அவை - (பரமோத்தேச்யமென்று ப்ரஸித்தமான) திருவடிகளை, தொழுவது அன்றே - தொழுவது அல்லவா, என் - என்னுடைய, சீர் கெழு தோள் - (ததீயரைத் தொழுவதென்றால் விருப்பமடைந்து பூரிக்

குஞ்) சிறப்புப்பொருந்திய தோள், செய்யும் - (எனக்குச்) செய்கின்ற, சிறப்பு - உபகாரமாகும்; (எ - று.)

கீழ்ச் செய்யுளில் எம்பெருமானது திருத்தோளைக் காண நினைவேனென்ற இவ்வாழ்வார், இந்தப் பாசுரத்தில் ததீயரிடத்து அடிமை செய்வதில் ஆதரவு கொண்டவராய், எனக்கு 'அவ்வெம்பெருமானது தோளைத் தொழவேண்டா ! தொழுவார் தொழுக; அப்பரமனது தோளைத் தொழுகின்றவர்களின் தாளைத் தொழும் இவ்வளவே வேண்டுவது' என்கின்றார். அறுக்க அறுக்க முளைப்பதாய் இத்துணையென்று வரையறுத்துச் சொல்லமுடியாமையாலே 'முடியனைத்தும்' என்றார். (சங)

44. சிறந்தார்க் கெழுதுணையாஞ் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன் - அறந்தாங்கு
மாதவனே யென்று மனம்படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினா லுள்ளு.

(இ - ள்) சிறந்தார்க்கு - (எம்பெருமான் திருவுள்ளத்துக்கு உகப்பாய்ச்) சிறந்தவரான ஞானிகட்கு, எழு துணை ஆம் - (ஸம்ஸார ஸம்பந்தமற்று உஜ்ஜீவித்துப்) போகின்ற (அர்ச்சிராதி மார்க்கத்துக்கு ஆதிவாஹிகர்க்கு முன்னேதானே) துணையாகக் கொண்டுபோமவனான, செங்கண் மால் - (அந்த அடியார் திறத்தில் வாத்ஸல்யத்தாலே) சிவந்த திருக்கண்களையுடைய திருமாலின், நாமம் - (வாத்ஸல்யாதி குணங்கட்கு ஸூசகமான) திருநாமங்களை, மறந்தாரை - (எப்போதும் அநுஸந்திக்கவேண்டியதாயிருக்க அவ்வாறுசெய்) யாமல் மறந்திருப்பவர்களை, மானிடம் ஆ - (சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய) மநுஷ்ய ஜந்மத்திலே பிறந்தவர்களாக, வையேன் - (என் மனத்திலே) நினைத்திருக்கமாட்டேன்; அறம் - கருணையென்கிற தருமத்தை, தாங்கும் - தரியாநிற்கிற, மாதவனே - ஸ்ரியப்பதியானவனே ! என்னும் - என்று ஆதரிக்கிற, மனம் - புத்தியை, படைத்து - பெற்று, மற்று - பின்பு, அவன் பேர் - அந்த ஸ்ரீமந் நாராயணன் திருநாமங்களை, நாவினால் - நாக்கினால், ஓதுவதே - சொல்லுகையில்தானே, உள்ளு - (மனமே) நீ ஊன்றி நினை; (எ - று.)

கீழ்ப்பாசுரத்தில் எம்பெருமானைப்பற்றினார் விஷயத்தில் தமக்கு உள்ள ப்ராவண்யத்தை வெளியிட்ட இவ்வாழ்வார் இந்தப் பாசுரத்தில் எம்பெருமானைப் பற்றாத அபாகவதர்களைப் பழித்தருளி, பின் தமது மனத்தை நோக்கி 'கருணாபரிபூர்ணனான ஸ்ரீமந்நாராயணன் என்று உறுதியான எண்ணங்கொண்டு அவன் பேரை இடைவிடாமல் அநுஸந்திப்பதிலேயே ஊன்றியிருப்பாயென்று மனத்தை நோக்கி உபதேசிக்கின்றனரென்க. 'மனமே'! என்று ஒரு சொல் வருவிக்க, இனி, இந்தப் பாசுரத்தின் பின்னிரண்டடிகளைப் பரோபதேசஞ் செய்வதாகக் கொள்ளலுமொன்று. (சச)

45. உளதென் றிறுமாவா ருண்டில்லை யென்று
தளர்த லதனருகுஞ் சாரா - ரளவறிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று,

(இ - ள்.) அளவு அரிய வேதத்தான் - (எத்துணைப் பேரறிஞர்க்கும்) அளவிடமுடியாதபடி [அபரிச்சின்னமான] வேதங்களாலே பெரும்பொருளாகப் பிரதிபாதிக்கப்படு

வனாய், வேங்கடத்தான் - (கீழ்க்கூறியவாறு வேதத்திற் கேட்டுப்போவதன்றிக் கண்ணாலேகண்டு அநுபவிக்கலாம்படி) திருமலையிலே வந்து ஸந்நிஹிதனான ஸௌலப்யத்தையுடையனாய், விண்ணோர் முடிதோயும் பாதத்தான் - (பரத்வத்தை அநுபவிப்பதில் நிரம்பிய அநுபவமுள்ள) நித்ய சூரிகள் தன்னுடைய ஸௌலப்யத்துக்குத் தோற்றுத் தங்கள் திருமுடிகளைத் திருவடிகளிலே மடுக்க அத்தாலே ஸ்பர்சிக்கப்பட்ட திருவடிகளை யுடையனான ஸர்வேச்வரனுடைய, பாதம் - திருவடிகளை, பயின்று - இடைவிடாமற் பழகி, (அதனால் தெளிந்த ஞானிகள்), உளது என்று இறுமாவார் - (ஐஹிகமான ஸம்பத்துத் தமக்குக் உண்டானது கொண்டு) 'நமக்குச் செல்வம் உண்டாயிருக்கிறது' என்று செருக்குக்கொள்ளவும் மாட்டார்கள்; (அவ்வாறு தோன்றிய செல்வம் போய்விட்டாலும்), உண்டு இல்லை என்று - (நமக்குத் தோன்றிய செல்வம் இப்போது போய்விட்டதே !' என்று சிந்தைகொண்டு, தளர்தல் அதன் அருகும் - வருந்தி வீழ்தலாகிய அத்தச்செயலினருகேயும், சேரார் - சேர்ந்திடமாட்டார்கள்; (எ - று.)

நித்ய ஸூரிகள் விரும்பி மேல்விழுகின்ற ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளிற் பழகுமவர்கள் செல்வத்தினுடைய லாப அலாபங்களை லக்ஷ்யஞ்செய்யா ரென்றபடி. உளதென்று இறுமாவார் - தரித்திரனுக்கு த்ரவ்யமுண்டானால் மாதா பிதா ஆசார்யன் முதலிய கௌரவ்யரையும் அவமதிப்பது உண்டு, இவர்கள் அப்படிச் செய்யார்கள். நித்யதரித்திரனுக்கு த்ரவ்யமில்லை யென்றசோகம் அத்துணையாகப் பிறவாது, ஒருநாள் த்ரவ்யம் உண்டாய் அதனை இழந்தானாகில், அவன் 'பாவியேன் முன்பெல்லாம் சுகமாகஜீவித்தேன், இப்போது மிடியால் இடிபடாநின்றேன், என்று மிகவும் சோகித்தற்குக் காரணமா மாதலால் 'உண்டில்லை யென்று தளரார்' என்றது. தளராரென்றது 'தளர்தல் தனரு குஞ்சாரார்' என்றது - இந்த ஞானிகள் த்ரவ்யத்தை ஸ்திரமென்று நினையாதே! அஸ்திரமென்றே நினைத்திருக்கையாலே, த்ரவ்யநாசத்தாலே சோகத்தையடைந்து அநுதாபங்கொண்டு பிறகு அந்த த்ரவ்யத்தில் நசையற்று மீளும் நாட்டிலுள்ளவர் போலயிரா ரென்றபடி. த்ரவ்யத்தைப்பற்றி மகிழ்தலும் இழந்தமைக்கு வருந்துதலுஞ்செய்யா ரென்று அருளிச்செய்த இவ்விடத்தில் இந்தஞானிகள் பகவத் விச்லேஷத்தாலே வருந்துதலும், அவனுடைய ஸம்ச்லேஷத்தாலே மகிழ்ந்திருத்தலுமாவ ரென்பது, பெறப்படும்; அவ்வாறு இருத்தல் ஞானிகளுக்கு ஏற்றதன்மையாம். பின்னிரண்டடிகளில் ஸர்வேச்வரனைக் காட்டுகின்ற மூன்று தொடர்களும் - எம்பெருமான் வேதப்ரதிபாத்ய னென்பதையும், கண்ணாலே காணவேணு மென்று ஆசைப்படுமவர்க்கு அப்படியே காணலாம்படி இருப்பவ னென்பதையும், அப்படி ப்ரத்யக்ஷமானாலும் ஐஹிகதனம்போல உபேட்சிக்கத்தகாதவ னென்பதையும் காட்டும். (சரு)

46. பயின்ற தரங்கந் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்-பயின்ற
தணிதிகழுஞ் சோலை யணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால்.

(இ - ள்.) மணி - நீலமணிபோலே, திகழும் - ஒளிவிடுகின்ற (வடிவையும்), வண்- (அப்படிப்பட்ட வடிவை ஆச்ரிதர்க்கு முற்றூட்டாகக் கொடுக்கும்), உதாரகுணத்தையுடைய, தட கை - பெரியதிருக்கைகளையு முடைய, மால் - திருமால் பயின்றது - (அவதாரங்கள் போல ஆய்விடாமல்) நித்யவாஸம் பண்ணினது, அரங்கம் - திருவரங்கத்திலும்,

திருக்கோட்டி - திருக்கோட்டி யூரிலுமாகும்; பல் நாள் பயின்றதுவும் - பலநாளாக நெருங்கிவாழ்வதும், வேங்கடமே - திருவேங்கடமலையிலே யாகும்; (இப்படியே) பல் நாள் பயின்றது - நெடுநாளாக நெருங்கி வாழ்வது, அணி திகழும் சோலை - அழகு விளங்குகின்ற சோலைகளையுடைய, அணி நீர் மலையே - (இந்த ப்ரபஞ்சத்திற்கே) ஆபரணமாக விளங்குகின்ற திருநீர்மலையிலே யாகும் (எ - று.)

தன்னை ஆச்ரயித்தவர்கள் ஐஹிகமான ஐச்வரியங்களின், லாப அலாபங்களாலே நாட்டிலுள்ளார் படும் ஹர்ஷசோகங்களாகிற விகாரமற்றுத் தன்னை நெருங்கி யநுபவிக்கையாகிற இந்நினைவு தோன்றும்படி க்ருஷி பண்ணும் பொருட்டே அந்த ஸர்வேச்வரன் பல திருப்பதிகளிலும் விரும்பி வாழ்கின்றனனென்பதாம். பயின்றது என்று பன்முறை அருளிச் செய்தது அவ்வெம்பெருமானை ஆச்ரிதார்த்தமாகச்செய்யும் க்ருஷியின் அருமைப்பாட்டை நினைத்து பயின்றதரங்கம் திருக்கோட்டி - பன்மையில் ஒருமை வந்த வழுவமைதி. (சகூ)

47. மாலை யரியுருவன் பாத மலரணிந்து
காலை தொழுதெழுமின் கைகோலி - ஞால
மளந்திடந் துண்டுமிழ்ந்த வண்ணலைமற் றல்லா
லுளங்கிடந்த வாற்றா லுணர்ந்து.

(இ - ள்.) ஞாலம் - பூமிப்பரப்பு முழுவதையும், அளந்து - (இலேசாக) அளந்து, இடந்து - (இரணியாட்சன் கடலிற்கொண்டு ஒளித்தகாலத்தில் அப்பெருங்கடலினின்று வராஹாவதாரமான தன் கோட்டாற்) குத்தியெடுத்து, உண்டு - மகாப் பிரளயகாலத்தில் (அந்தப் பிரளயத்தால் அழிவு நேராதபடி) திருவயிற்றிலே வைத்துப் பாதுகாத்து, உமிழ்ந்த - (அந்தப் பிரளயம் நீங்கினவுடனே வெளி நாடு காணும்படி) உமிழ்ந்த அண்ணலை - (இப்படி ரக்ஷிக்கையாகிற செயலாலே) தானே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படி யிருக்கிறவனை, அல்லால் - (கீழ் நான் சொன்னவாறு எல்லார்க்கும் பொதுவாகச் செய்யும் ரக்ஷணந்) தவிர, மற்று - மேலும், உளம் கிடந்த ஆற்றால் - ஆச்ரிதர் பொருட்டு விசேஷமாகச் செய்தவையாய் (அந்த ஆச்ரிதர்கள் ஈது ஒரு நீர்மை இருந்தபடி என்! என்று மனம் கரையும்படியுள்ள குணசேஷ்டித ப்ரகாரங்களோடே, உணர்ந்து - அறிந்து அநுஸந்தித்து,—அரி உருவன் - (ஆச்ரிதனுக்காகத் தன்னை யழியமாறிக்கொண்ட) நரஸிம்ஹவேஷத்தை யுடையவனுடைய, பாதம் மலர் - திருவடித் தாமரைகளிலே, மாலை அணிந்து - (செவ்விதாகத் தொடுத்த) மாலைகளை ஸமர்ப்பித்து, காலை - ஸத்வோத்தரமான காலத்திலே, கைகோலி தொழுது - கைகூப்பித்தொழுது, எழுமின் - உஜ்ஜீவியுங்கள் ; (எ - று.)

ஸர்வேச்வரன் ப்ரபஞ்சத் தவரைத்தான் பெறவேணுமென்று பல திருப்பதிகளிலும் புகுந்து செறிந்து க்ருஷி பண்ணுகிற ஸ்வபாவனென்று நிரூபித்தபின்பு, இதனால் உலகத்தார்க்கெல்லாம் பொதுவாகவும் ஆச்ரிதர் விஷயத்தில் விசேஷமாகவும் முயன்று ரக்ஷிக்கிற அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் விஷயத்திலே நான் சொன்னவையும் மற்றும் உங்கள் நெஞ்சிற் படுபவையுமான குணசேஷ்டிதங்களை யநுஸந்தித்து க்ருதஜ்ஞதையைப் பாராட்டுபவராய் அவனை யாச்ரயியுங்கோளென்று உலகத்தார்க்கு உபதேசிக்கின்றனரென்க. மற்றெல்லாம் என்ற பாடத்துக்கு, எல்லாம்—ஆச்ரயிக்கும் ப்ரகாரங்களை யெல்லாம் என்க. கைகோலி - முயன்று என்றுமாம். (சஎ)

48. உணர்ந்தாய் மறைநான்கு மோதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள்தோள் மாலே - மணந்தாய்போய்
வேயிருஞ் சாரல் வியலிரு ஞாலஞ்சூழ்
மாயிருஞ் சோலை மலை.

(இ - ள்) மறை நான்கும் (பிரளயத்தில் உன்னுள்ளே யடங்கிக்கிடந்த) நான்கு வேதங்களையும், உணர்ந்தாய் - (பதவர்ணாதிகளின் ஆநுபூர்வி தப்பாதபடி) அறிந்து அருளிச்செய்தாய்; நீதி - (அந்த வேதார்த்தங்களை ஐயம் திரிபு இல்லாமல் பொருட்பொருத்தமாம்படி விசதமாக்கும் ஸ்ம்ருதி முதலான உபப்பிரம்மணங்களை, ஓதினாய் - (மநு முதலான ருஷிகளையுண்டாக்கி) அருளிச்செய்தாய், (அந்த வேதமென்ன உபப்பிரம்மணமென்ன இவற்றிற்கு ப்ரதானமான ப்ரதிபாத்யையான) மலர் மகள் - தாமரைப்பூவை இருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியாருடைய, தோள் - திருத்தோளோடே மணந்தாய் - (ஒருதேச விசேஷமான பரமபதத்திலே) நித்ய ஸம்ஸ்லேஷம் பண்ணிக்கொண்டிருந்தாய்; மாலே - (அந்தப் பிராட்டித் திறத்திற் பெரும் பிச்சுக்கொண்டவனே ! (புஸ்தகத்தில் படிக்கக்கேட்டுப் போம்படி எட்டாத நிலத்திலே அந்தப்பிராட்டியோடு சேர்ந்து வாழ்வதோடு நில்லாமல் ஸம்ஸாரிகளும் தன்னை வந்து கிட்டும்படி), வேய் இருஞ்சாரல் - மூங்கில்கள் நிறைந்த பெரிய தாழ்வரைகளை யுடையதாய், வியல் இரு ஞாலம் சூழ் - விஸ்மயநீயமாய்ப் பரந்த பூமியிலுள்ளவர்களாலே நிறையப்பெற்றதான, மா இரு சோலை மலை - உயர்ந்து பரந்த சோலைகளை யுடைத்தான திருமலையிலே, போய் உகப்புடன் சென்று, மணந்தாய் - சேர்ந்தாய்; (எ - று.

கீழ்ப்பாசுரத்தில் ‘ உளங்கடந்த வாற்றாலுணர்ந்து தொழுமின் ’ என்றார். ஆச்ரிதர் மனத்திற் கிடக்கும்படி அந்த எம்பெருமான்செய்த செயல் தாம் எவை! ‘ஒன்று ஒரு ப்ரச்னம் உண்டாக, அப்பரமன் செய்த செயல்களுக்கு ஓரளவில்லையென்கிறார், இதில்.

49. மலையேழும் மாநிலங்க ளேழு மதிரக்
குலைசூழ் குரைகடல்க ளேழும் - முலை சூழ்ந்த
நஞ்சுரத்துப் பெண்ணை நவின்றுண்ட நாவனென்
றஞ்சாதென் னெஞ்சே யழை.

(இ - ள்.) என் நெஞ்சே - எனக்குச் சுவாதீனமான மனமே ! முலை சூழ்ந்த - ஸ்தநத்திலே வ்யாபித்துள்ள, நஞ்சு - விஷத்தாலுண்டான, உரத்து - வலிமையோடு கூடிய, பெண்ணை - பேய்ப்பெண்ணான பூதனையை, (முலைதந்த நன்றி தோன்ற), நவின்று - (ஸ்தநத்தையுண்ணும்போது நடுநடுவே சில மழலைச் சொற்களைச் சொல்லிக்கொண்டு, உண்ட - முலையுண்டு முடித்த, நாவன் என்று - நாவையுடையவனென்று சொல்லி, மலை ஏழும் மா நிலங்கள் ஏழும் குலைசூழ் குரைகடல்கள் ஏழும் அதிர - (பூமிக்கு ஆதாரமான) ஸப்தகுலபர்வதங்களும் பரப்பையுடைத்தான ஸப்தத்வீபங்களும் கரையாலே சூழப்பட்டு அவ்வெல்லையைக்கடவாமல் அடங்கி நிற்கிற சப்திக்கின்ற ஸப்த ஸமுத்ரங்களும் அதிரும்படி, அஞ்சாது அழை - (ப்ரதிபந்தகங்களை நினைத்து) அச்சங்கொள்ளாமல் வாய் விட்டுக்கூப்பிடு; (எ - று.)

‘ஸர்வேச்வரன் கீழ்ச்சொன்னபடி திருமலையிலே நமக்காகக்கிட்டி வாழ்பவனான பின்பு, நமக்கு வரக்கூடிய ப்ரதிபந்தகத்தைக் குறித்துச் சிறிதும் அச்சங்கொள்ளாமல் பூமிமுழுவதும் அதிரும்படி அவனைச்சொல்லிக் கூப்பிடு’ என்று தம்முடைய மனத்தை நோக்கி ஆழ்வார் உபதேசிக்கின்றனரென்க. குலை - கரை, குரை - ஒலி. (சக)

பெருமான் திருப்பாதம் பணிந்து இவள் நோயிது தீர்த்துக்கொள்ளாது’ என்று அருளிச்செய்தார். இதை விவரிப்பதற்கே ஸ்ரீ பாஷ்யகாரர் கத்யத்ரயத்தையும், ஸ்ரீ தேசிகன் கத்யத்ரய பாஷ்யத்தையும் அருளிச்செய்தார்கள், பகவானை அடைவதற்கு ப்ரபத்தியே உபாயம் என்னும் அர்த்தத்தை (1) ‘நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கு’ என்றும், (2) ‘முகில் வண்ணனடியை அடைந்து அருள் சூடி உய்ந்தவன்’ (3) ‘ மாளுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே’ என்றும், (4) ‘தொழுதாடித் தூமணிவண்ணனுக்கு ஆட்செய்து நோய்தீர்ந்த’ என்றும், (5) ‘கழிமின் தொண்டீர்கள் கழித்துத் தொழுமின் அவனைத் தொழுதால் வழிநின்ற வல்வினை மாள்வித்து அழிவின்று ஆக்கம் தருமே’ என்றும், இத்யாதிகளில் பரக்க நிரூபித்தருளினார். இப்படிப் பகவானுடைய திருவடிகளில் பரஸமர்ப்பணம் பண்ணினவர்களுக்கு பரமபத ப்ராப்தியாகிற பலம் அவிநாபூதம் என்னும் அர்த்தத்தை (6) ‘ சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்’ என்றும், (7) ‘ பின்னும் ஆக்கைவிடும்பொழுது எண்ணே’என்றும், (8) ‘ஆழியான் அருள்தருவானமைகின்றான் அது நமது விதிவகையே’ என்றும் அருளிச்செய்திருக்கிறார்.

பக்தியை நிரூபிக்கும் ப்ரகாரம்.

பக்தியாவது ப்ரீதியுடன் ஒரு வஸ்துவை இடைவிடாமல் நினைத்துக்கொள்ளுதல். அது எப்படிச் செய்யவேண்டும் என்னில் :—‘ தத்வஜ்ஞானம் இல்லாதவர்களுக்கு ஶப்தாதி விஷயங்களில் எப்படிப்பட்ட ப்ரீதி உண்டாகிறதோ, அப்படிப்பட்ட ப்ரீதி உம்மை நினைக்கும்பொழுது எனக்கு உண்டாகவேண்டும்’ என்றும், ‘ஜ்ஞானி யென்னப்பட்டவன் பரமைகாந்தி’ அவன் பகவானுக்கு வசப்பட்ட ஜீவனத்தை உடையவன். அந்தப் பகவானுடன் சேர்ந்திருப்பதையே ப்ரேயோஜனமாயும், அவனை விட்டுப் பிரிவதைத் துக்கமாயும் நினைத்துக்கொண்டிருப்பவன்’ என்றும் சொல்லுகிறபடியே பகவானை விட்டுப் பிரிந்திருக்கும் ஸமயத்தில் தன் உயிரே தங்காது என்பதை (9) ‘பாரெல்லாமுண்ட நம்பாம்பணையான் வாரானால்’ஆரெல்லே வல்வினையே னாவிகாப்பாரினியே’ என்றும், (10) ‘நன்னீர்மை இனி அவர்கண் தங்காது’ என்றும், (11) அவனருள் பெறுமளவு மாவியில்லாது’ என்றும் இப்படிப்பல விடங்களில் அனுஸந்தித்தருளினர். இந்த மோகத்தின் மிகுதியாலே சில ஸமயத்தில் தம்முடைய மதியெல்லாம் உள்கலங்கினவராய் பக்ஷிமுதலியவைகளைத் தூதுவிடும்படியான மோகாதிசயத்தை அடைந்தவராய் நின்றார். அவனுடன் ஸம்ஶ்லேஷித்திருக்கும் தசையில் (12) ‘ தானும்

(1) 5-10-11. (2) 7-2-11. (3) 1-3-8. (4) 4-6-11. (5) 1-6-8. (6) 9-10-5. (7) 1-2-9. (8) 10-6-1. (9) 5-4-1. (10) 1-4-4. (11) 9-9-6. (12) 2-8-1.

யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம் தேனும்பாலும் நெய்யும் கன்னலும் அமுதுமொத்தே' என்றும், 'எனதாவி உள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு' என்றும், 'அரவில் பள்ளிப்பிரான் தன்மாய வினைகளையே அலற்றி இரவு நன்பகலும் தவிர்கிலன் என்ன குறைவெனக்கே' இத்யாதிகளில் அத்யுச்ரிதமான ஆநந்தத்தை அனுபவித்தபடியை நிரூபித்தருளினர். இப்படிப் பகவானுடைய ஸம்ச்லேஷமே ஸர்வபுருஷார்த்தமென்றும், அவனுடைய வியோகமே மஹத்தான துக்கமென்றும் நிரூபித்தாராயிற்று. இப்படிப் பகவத் விச்லேஷத்தை ஸஹியாமல் நாயகனுடைய பிரிவில் கலங்கின ஒரு பிராட்டியின் தசையை அடைந்தவராய் தாயிரங்கல், தோழி இரங்கல், தனி இரங்கல், தூது விடுதல் முதலிய துறைகளினால் தம்முடைய துக்கத்தின் ஆதிக்யத்தை நிரூபித்திருக்கிறபடியினால் அவிவேகிகளுக்கு ப்ராக்ருத விஷயங்களில் எப்படிப்பட்ட அதிகமான ப்ரீதி இருக்கிறதோ அப்படிப்பட்ட ப்ரீதி பகவானிடத்தில் இருக்கவேண்டும் என்பது பக்தியின் லக்ஷணம் என்று கீழ் நிரூபித்ததைத் தம் அனுபவத்தில் அருளிச்செய்தாராயிற்று. ஸ்ரீபாஷ்யகாரர் பக்தியின் லக்ஷணத்தை நிரூபித்தருளி இந்த த்யானத்தினால் நினைக்கப்படும் வஸ்து மிகவும் ப்ரியமானதினால் அதைப்பற்றிய த்யானமாகிய தானும் எவனுக்கு ப்ரியமாய் இருக்கிறதோ அவனே பகவானுக்கு ப்ரியனாவான் என்றருளிச்செய்த அர்த்த விசேஷமும் (1) 'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும், (2) 'பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரியபாரதம் கைசெய்து ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச்செய்து போனமாயங்களும் நிறந்தனூடுபுக்கு எனதாவியை நின்று நின்று உருக்கி யுண்கின்ற' என்றும் இப்புடைகளில் பரக்க அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. 'எப்பொழுதும் என்பெயர் முதலியவைகளைச் சொல்லிக்கொண்டு என்னை உபாஸிக்கிறார்கள்' என்றும், 'என்னை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு ஆநந்தத்தை அனுபவிக்கிறார்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிற லக்ஷணத்தையும், (3) 'திரை கொள்பௌவத்துச்சேர்ந்ததும் திசைஞாலம் தாவியளந்ததும் நிரைகள் மேய்த்ததுமே பிதற்றி நெடுங்கண்ணீர்மல்க நிற்குமே' என்றும், (4) 'அவன் சின்னமும் திருநாமமும் இவள்வாயனகள் திருந்தவே, என்றும், (5) கைதொழுத அந்நாள்தொடங்கி இந்நாள்தொறும் இருந்திருந்து அரவிந்தலோசன! என்றென்றே நைந்திரங்குமே' என்றும் (6) சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த' என்றும் அருளிச்செய்தார். [illegible] என்கிறபடியே ப்ரத்யக்ஷத்தில் பார்ப்பதுபோலவே இருப்பதொன்று பக்தி என்று சொல்லியிருப்பதும் (7) 'எங்ஙனேயோ' (8) 'அந்தாமத்தன்பு', (9) 'ஏழையராவி' இத்யாதி திருவாய் மொழிகளில் தமக்கு இருந்ததென்பதை அருளிச்செய்தார். இப்படிப்பட்ட பக்தி யோகத்தை உடையவர்

(1) 9-6-2. (2) 5-10-1. (3) 6-5-3. (4) 6-5-7. (5) 6-5-8. (6) 6-5-11. (7) 5-5-1. (8) 2-5-1. (9) 7-7-1.

களினால் பகவான் ப்ராப்யனாவன் என்னுமர்த்தத்தை (10) 'சார்வே தவநெறி' என்னும் திருவாய்மொழியில் பரக்க நிரூபித்தருளினர்.

மற்றரசங்களும் உள்ளடங்கி இருத்தல்.

ஆழ்வாருடைய பக்தி மிகவும் தலையெடுத்து ச்ருங்காரமாகப் பரிணமித்தது, அதில் நேரில் பகவானை யோகத்தினால் ப்ரத்யக்ஷத்தில் அனுபவிப்பது போல அனுபவிப்பது யோகமாகவும் அந்தயோகதசைக்கு முன் பின் தசைகள் விரஹமாகவும், அந்த விரஹதசையில் ஆசார்யர்களை நாரைமுதலிய பக்ஷிகளாகவும் தூதுவிடுகிறார் என்று ஆசார்யன் நிரூபித்தருளி இருக்கிறபடியினால் ஆழ்வாருடைய பக்தி விப்ரலம்ப ச்ருங்காரம், யோகச்ருங்காரம் என்னப்பட்ட இருவகையாயும் இருப்பதொன்று என்ப தேற்படுகிறது. அதில் பகவானைவிட்டுப் பிரிந்து தான் மாத்திரம் நோவுபடுவதன்றிக்கே தன்னோடொக்க லோகத்தில் மற்ற வஸ்துக்களும் பகவானுடைய விரஹத்தினால் நோவுபடுகின்றனவாக எண்ணி அவைகளுக்காகத்தான் வ்யஸனப்படுகிற (1) 'வாயும் திரையுகளும்' என்கிற திருவாய்மொழியில் சோகரஸமும், தமக்குத் தாரகமான பகவதனுபவத்தை நிறுத்திவிட்டு, இந்தச் சேதனர்களுக்கு ஸம்ஸாரத்தில் உண்டாகும் கெடுதியை அவர்கள் அறியாமல் நிமக்நராயிருப்பதை நிவ்ருத்தி செய்யவேண்டும் என்று க்ருபையினால் தூண்டப்பட்டவராய் (2) 'வீடுமின் முற்றவும், (3) சொன்னால் விரோதம் இத்யாதி திருவாய்மொழிகளில் பரோபதேசம் செய்திருக்கிறபடியினால் கருணாரசமும், (4) 'ஆழியெழ' முதலிய திருவாய்மொழிகளில் பகவானுடைய வீரசரித்திரங்களை நிரூபித்திருக்கிற படியினால் வீரரஸமும், பகவான் ஸர்வ வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாயிருந்தும் அவற்றில் இருக்கும் தோஷங்கள் ஒட்டாமல் நிற்பது முதலிய ஆச்சர்யத்தை அனுஸந்திக்கிற (5) 'மாயாவாமனனே' என்கிற திருவாய்மொழியில் ஒன்றுக்கொன்று விருத்தமான இருட்டு வெளிச்சம் இவைகளைத் தனக்கு சரீரமாக உடையவன் என்று நிரூபிக்கிற படியினால் அத்புத ரஸமும், (6) நண்ணாதார் முறுவலிப்ப', (7) 'ஒரு நாயகமாய், இத்யாதி மற்றத் திருவாய் மொழிகளில் ஸம்ஸார துக்கத்தை நிரூபித்து, பகவானுடைய திருவடிகளை அடைவதே உத்க்ருஷ்டமானது என்று அருளிச்செய் திருப்பதினால் சாந்திரஸமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ச்ருங்கார ரஸத்தை நிரூபிக்கும் இடத்தில் கேவலம் தமிழர்கள் சொல்லுகிறபடியே 'கடலன்ன காமத்தராயினும் மாதர் மடலூரார் ஆடவர் மேல்' என்கிற லக்ஷணம் அவ்வளவு உசிதமானதன்று என்று திருவுள்ளம்பற்றி (8) 'மாசறு சோதி' என்கிற திருவாய்மொழியில் (9) 'யாம் மாடலூர்.

(10) 10-4-1. (1) 2-1-1. (2) 1-2-1. (3) 3-9-1. (4) 7-4-1. (5) 7-8-1. (6) 4-9-1. (7) 4-1-1. (8) 5-3-1. (9) 5-3-9.

துமே' என்று தாம் நாயகியின் தன்மையை அடைந்திருக்கும் பொழுதே
மடலூர்ந்திருக்கிறார் என்பது ஒரு விசேஷம். ஆனால் தமிழ் லக்ஷணத்தி
ற்கு விரோதமாகாதோவென்ன? இதற்கு ஸமாதானம் திருமங்கையாழ்வா
ரால் பெரிய திருமடலில்,

' காமத்தின் மன்னும் வழிமுறையே நிற்றும் நாம் மானேக்கில்
அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல்
மன்னுமடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு—அதனை யாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினேம் வேண்டாதார்
தென்னன் பொதியில் செழுஞ்சந்தனக் குழம்பின்
அன்னதோர் தன்மை அறியாதார் ஆயன்வேய்
இன்னிசை யோசைக்கு இரங்காதார் மால்விடையின்
மன்னுமணி புலம்ப வாடாதார் - பெண்ணைமேல்
பின்னும் அவ்வன்றிற் பேடைவாய் சிறு குரலுக்கு
உன்னி யுடலுருகி நையாதார் உம்பர் வாய்த்
துன்னுமதி யுகுத்தது நிலாநீள் நெருப்பில்
தம்முடலம் வேவத் தளராதார் - காமவேள்
மன்னும் சிலைவாய் மலர்வாளி கோத்தெய்ய
பொன் னெடுவீதி புகாதார்'

என்றருளிச் செய்திருக்கிறார். இதன் கருத்து:— காமமென்பது மனு
ஷ்யருக்கு வசப்பட்டதல்லவே? அதை அளவு படுத்துவதென்பது ஸாத்ய
மோ? அது வஸ்துவின் யோக்யதைக்குத் தக்கபடியன்றோ மிகுதியாயும்
குறைந்தும் இருக்கும்? பகவானோ அபரிமித கல்யாண குணத்தை உடை
யவன். அவன் விஷயத்தில் அவனை உள்ளபடியே அறிந்தார் ஈடுபடும்பொ
ழுது இவ்வளவு தான் பக்தி இருக்கவேண்டும் என்று கட்டுப்படுத்த முடி
யுமோ? அப்படி ஒரு வரம்பிட்டால் பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவாதி
களை வரம்பிட்டதாகும். ஆகையினால் தென்மொழியில் சொன்னதை நாம்
அங்கீகரிக்கவில்லை. வடமொழியில் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் மடலூ
ருதல் சாஸ்திர ஸம்மதமானது என்று கொண்டு அதில் உபக்ரமிக்கிறோம்.
அப்படித் தமிழர்கள் சொன்னதற்குக் காரணம் அவர்கள் காமோத்தீபன
ஹேதுக்களான சந்தனக்குழம்பு முதலியவைகளின் சக்தியை ஸரியாக
அறியவில்லை. அன்றிக்கே அவர்களுக்கு உண்டாகவில்லை போலும்—
என்பது. இவ்வர்த்தத்தை அதாவது பக்தியின் (ப்ரீதியின்) மிகுதியினால்
ஒருவர் இந்தக் கார்யம் மட்டும் தான் செய்யலாம் என்கிற நிர்ப்பந்தம்
இருக்கமுடியாது என்னும் அர்த்தத்தை வால்மீகியும் அசோக வனிகையில்

பிராட்டி பகவானைவிட்டுப் பிரிந்த சோகத்தின் மிகுதியினால் தூண்டப்பட்
டவளாய் லோகத்தில் நிந்திக்கப்படும் தற்கொலை செய்துகொள்வதைச் செய்
யத்துணிந்தபோதிலும் அவளை 'அநிந்திதா' (நிந்திக்கப்படாதவள்) என்று
ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். இதன் கருத்து— புருஷர்களையும், ஜிதேந்
திரியர்களான மஹரிஷிகளையும் பெண்ணுடை உடுத்தும்படி செய்யவல்ல
திருமேனி காந்தியை உடைய சக்ரவர்த்தித் திருமகனை விட்டுப் பிரிந்து
லோகத்தில் பர்த்தாவைப் பிரிந்த ஸ்திரீகளைப்போல் பிராட்டியும் இருந்திரு
ப்பாளேயாகில் அவளுக்குத் தான்பிரிந்த வஸ்துவின் பெருமை தெரியவில்
லையாகையினால் நிந்திதையாவாள். அப்படிக்கில்லாமல் தான் தற்கொலைசெ
ய்துக் கொள்ளத்துணிந்தமையினால் தன்னுடைய ப்ரீதியின் ஆதிக்யத்தைத்
தெரிவித்து அத்தால் அநிந்திதையானாள், என்பது. இப்படியே ஸாதாரண
மற்ற தமிழர்களினால் கண்டறியப்படாத லக்ஷணங்களை நிரூபித்திருக்கிறார்.
அதாவது பிரிவில் தூதப்ரேஷணம் செய்தபொழுது 'எங்நீர்மை கண்டிரங்
கி இது தகாதென்னாத' என்று அருளிச்செய்திருப்பதை ஒரு தமிழன்
பார்த்து 'இது அஸம்பாவிதமாயிற்றே, கூடயிருந்தால் விரஹத்திற்கு
ப்ரஸ்தாவமில்லை, விரஹம் உண்டாயிற்றேயானால் அதைப் பார்ப்பதற்கு
ப்ரஸ்தாபமேயில்லையே' என்ன, இதற்கு ஸமாதானம் 'தாம் கூடியிருக்
கும் காலத்திலேயே தம்மால் ஸம்ச்லேஷிக்கப்படாத அங்கங்கள் வெளுத்
தும், ஸம்பந்தப்பட்டிருப்பவை சோபையோடு கூடியிருப்பதையும் நேரில்
கண்டு பார்த்திருக்கிறான் என்றபடி. இது தமிழ் லக்ஷணகாரிகளும்
'புல்கிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொண்டதே
பயிர்ப்பு' என்றும், 'காதலர் தொடுவுழி தொடுவுழி நீங்கி விடுவுழி விடு
வுழி பயத்தலானேன்' என்றும் சொல்லியிருக்கிறார்கள். இது கேவலம்
லக்ஷண க்ரந்தத்தில் இருக்கிறதேயன்றி இதைத் தமிழ்க்கவியாகிலும், ஸம்
ஸ்க்ருத கவியாகிலும் விவரித்தாரில்லை. இதை ஆழ்வார் ஒருவரே அருளி
ச்செய்ததாயிருக்கும். இவ்வர்த்தத்தையே விஸ்தாரமாய்ப் பத்துப்பாட்டுக்
களினால் (1) 'வேய்மருதோளிணை' என்னும் திருவாய் மொழியில் அந்யாபதே
சத்தாலே அருளிச்செய்தார். அதாவது ஸ்ரீக்ருஷ்ணனோடு ஸம்ஸ்லேஷித்துப்
போருகையாலே பொழுது விடியும் காலம் வந்துவிட்டால் அவன் பசுக்
களை மேய்க்கப்போய் விடுவானே, அப்பொழுது பிரிவு வந்து துக்கமுண்
டாகுமே, என்று அந்தப் பிரிவை சங்கித்து அவன் தன் பக்கலில் இருக்
கும்பொழுதே தன்னுடைய விரஹத்தைத் தெரிவித்த கோபிமார்கள் பாசு
ரத்தால் அருளிச்செய்தார். மேலும் கீழ் நிரூபித்திருக்கிறபடியே பக
வானுடைய பிரிவில் தன்னுடைய சோகத்தின் மிகுதியினால் மற்ற வஸ்து
க்களுக்கும் தன்னைப்போல் வருந்துகின்றனவாகக்கொண்டு அதை (2) 'வாயு

(1) 10-3-1. (2) 2-1-1.

திரையுகளும்' என்றாரம்பித்துப் பத்துப்பாட்டுக்களில் பரக்க நிரூபித்திருக்கும் அர்த்த விசேஷத்தை சுக ரிஷியும் பாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தின் இறுதியில் நிரூபித்திருக்கிறார். இப்படித்தாம் மிகவும் சோகார்த்தராய் நின்று கூப்பிடும் தசையில் பகவான் உடனே தன்னிஷ்டப்படி வந்து பரிமாறாமையினால் ப்ரணய கலஹத்தை அடைந்த பிராட்டி தசையையடைந்து (3) 'மின்னிடை மடவாரில்' அதைப் பரக்க நிரூபித்தருளினர்.

வேதாந்தார்த்தங்களை ப்ரகாசிக்கும் ப்ரகாரம்.

'உயர்வற' என்றாரம்பித்து முதல்பாட்டில் இந்த க்ரந்தத்திற்கு ப்ரதிபாத்யமான ப்ரும்மத்தை நிரூபித்தருளினர். இவ்வர்த்தத்தையே ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸம்ஸ்க்ருதத்தில் உபபாதித்தருளினர். 'மனனக மலமற' என்கிற இரண்டாம் பாட்டில் சேதனாசேதன வஸ்துக்களைக்காட்டிலும் விலக்ஷணன் என்றருளிச்செய்தார். அவன் சேதனாசேதனங்களை சரீரமாக உடையவன் என்று 'இலனது' என்கிற பாட்டில் அருளிச்செய்தார். மேல் மூன்று பாட்டுக்களினால் (நாமவன், அவரவர், நின்றனர்) இதையே விஸ்தரித்தருளினர். அதாவது சேதனாசேதன வஸ்துக்களின் ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் பகவததீனம் என்று நிரூபித்தருளினர். மேல் 'திடவிசும்பெரிவளி' என்கிற பாட்டில் வேதவிருத்தங்களான சமயங்கள் அப்பிரமாணங்களென்றும், தம்மால் ப்ரதிபாதிக்கப்பட்ட அர்த்தங்களே வேதத்தில் ஸம்யக் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், 'சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே' என்று காட்டியருளினர். வேதத்தைப் ப்ரமாணமாக அங்கீகரித்துப் பிறகு ப்ரும்ம ருத்ராதிகளைப் பரப்ரும்மமாகச் சொல்லுகிற மதங்களை 'சுரரறிவருநிலை' என்கிற பாட்டில் நிராகரித்தருளினர். வேதம் ஈச்வரன் ஒன்றையும் ஒப்பாத நிரீச்வரவாதியை 'உளன் எனில் உளன்' என்கிறபாட்டில் நிராகரித்தருளினர். இப்படிப் பகவான் ஸர்வ வஸ்துக்களிலும் வ்யாபரித்திருந்தானேயாகில் ஈச்வரர்கள் பலரென்ன ப்ரஸங்கிக்காதோ? என்னும் சங்கையை நிராகரித்துக்கொண்டு ப்ரதிவஸ்து பூர்ணத்வம் என்பதின் லக்ஷணத்தை 'பரந்த' என்கிற பாட்டில் நிரூபித்தருளினர். ஆக இப்பத்துப்பாட்டுக்களினாலும் பகவானே ஸர்வ ஜகத்காரணம். இதை யுக்திகளினாலும் சலிப்பிக்கவொண்ணாது என்று சாரீரக சாஸ்த்ரத்தில் முதல் இரண்டு அத்யாயங்களினால் நிரூபிக்கப்பட்டிருக்கும் அர்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று. இப்படிப் பரபக்ஷப்ரதிக்ஷேப பூர்வகமாக பரப்ரும்ம ஸ்வரூபத்தை நிரூபித்தருளி மேல் மூன்றாவது அத்யாயத்தில் முதல் பாதமாகிய வைராக்ய பாதத்தின் அர்த்தத்தை இரண்டாம் திருவாய்மொழியில் முதல் மூன்று பாட்டுக்களினால் நிரூபித்தருளினர். அதாவது மற்ற வஸ்

(3) 6-2-1.

துக்களின் அஸ்திரத்வத்தை நிரூபித்து அத்தால் அவற்றில் இருந்தும் விரக்தியை அடையும்படி உபதேசம் செய்தருளினாராயிற்று. மேல் இரண்டாவது உபயலிங்கபாதத்தின் அர்த்தத்தை 'இல்லதும்' என்றாரம்பித்து நிரூபித்தார். அதாவது பகவான் ஆச்ரயணீயன் என்பதற்காக அவனுடைய ஸர்வ ஸமத்வத்தையும், அவன் எல்லாரிடத்திலும் ஸௌஹ்ருத்தாயிருக்கும் தன்மையையும் அறிந்து கரணத்ரயத்தாலும் அவனை ஆச்ரயிக்கும் ப்ரகாரத்தை நிரூபித்தாராயிற்று. இப்படி பகவானிடத்தில் பக்தி உண்டாகி அவனை ஆச்ரயித்துப் பலம் பெறும்படியை மேல்பாட்டுக்களில் நிரூபிப்பதினால் மேல் பாதங்களினுடைய அர்த்தம் ஸங்க்ரஹிக்கப்பட்டதாயிற்று. இந்த அர்த்தத்தைப் பத்தாம் பத்தில் 'சார்வேதவநெறி' ஆரம்பித்து உபாயத்தையும் அர்ச்சிராதி கதியையும் விஸ்தாரமாக நிரூபித்தாராயிற்று. இவ்வர்த்தம் 'க்ஷளஸாரீர க யஜ்க்ஞு ஶ்ரீஹ விஸ்த விம்ஶதி வஹுதி ஸாஹஸ்ர' என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

தெளியாத மறை நிலங்கள் தெளிவிக்கும் ப்ரகாரம்.

இப்படி வேதாந்தார்த்தங்களை நிரூபிக்கும் இடத்தில் ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தில் ஸங்க்ரஹமாக ப்ரபாதிக்கப்பட்டிருக்கும் அர்ச்சிராதிகதி, நித்யஸூரிகளினால் முக்தன் ஸத்காரம் செய்யப்படுகை முதலியவற்றை (1) 'சூழ்விசும்பணி' என்கிற திருவாய்மொழியில் விஸ்தாரமாக ப்ரதிபாதித்தருளினர். அதாவது (2) 'எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர் கதிரவர் அவரவர் கைநிரைகாட்டினர்' என்றும், (3) 'கீதங்கள்பாடினர் கின்னரர் கெருடர்கள் வேதநல்வாயவர் வேள்வியுள் மடுத்தே' என்றும், (4) 'ஆண்மின்கள் வானகம் ஆழியான்தமர் என்று வாளொண்கண் மடநங்கையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே' என்றும், (5) 'தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்' என்றும் (6) 'முடியுடை வானவர் முறைமுறை எதிர்கொள்ள', என்றும் இப்புடைகளில் விஸ்தாரமாக நிரூபித்தருளினர். இவ்வளவும் போதாது என்று பெரியபிராட்டியார் தாமும் நேரில் எதிர்கொண்டுவரும் ஏற்றத்தை, (7) 'நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மதிமுக மடநங்கையர் ஏந்தினர்வந்தே' என்றருளிச் செய்தார், இவ்வளவு ஆடம்பரத்துடன் எதிர்கொண்டு வரப்படும் முக்தனைப்பார்க்க அதிக ஸந்தோஷத்துடன்கூட பரமபதநாதன் தானும் வருமதை (8) 'வந்தவர் எதிர்கொள்ள' என்றருளிச்செய்தார். இவ்வர்த்த விசேஷங்கள் எல்லாம் ஸ்ரீயப்பதியால் மயர்வற மதிநல மருளப்பெற்றவ ராகையினாலே ப்ரத்யக்ஷத்தில் தாம் அநுபவித்தபடியே இப்ரபந்தத்தில் அருளிச்செய்தாராயிற்று. இப்படியே இன்னும் அநேக அர்த்தங்கள் விசதமாக நிரூபிக்கப்பட்டிருப்பது அங்

(1) 10-9-1. (2) 10-9-4. (3) 10-9-5 (4) 10-9-6. (5) 10-9-7. (6) 10-9-8. (7) 10-9-10. (8) 10-9-11.

கங்கே வ்யாக்யானங்களைக் கண்டு கொள்வது. விஸ்தாரமாய் இங்கு எழுதப் படவில்லை.

அர்ச்சாவதாரத்தின் பெருமையை நிரூபிக்கும் ப்ரகாரம்.

பகவான் நமக்கு உபாயமாக இருப்பதற்கும், கைங்கர்யங்களுக்கு உத்தேஶ்ய னாகையினாலே ப்ராப்யனா யிருக்கைக்கும் அவனுடைய அர்ச்சாவதார ரூபமே முக்யமாக உபயோகமானது. ஆதலால் முதல் பத்தில் பகவான் ஸேவ்யன் என்பதினால் அவனே உபாயன் என்றும், இரண்டாம் பத்தில் அவன் போக்யன் என்பதினால் அவனே ப்ராப்யன் என்றும் நிரூபித்தருளி, இந்த உபாயத்வ உபேயத்வங்கள் இரண்டும் திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனுக்கே என்று நிரூபிப்பதற்காக அதை மூன்றாம்பத்தில் நிரூபித்தாராயிற்று. அதில் (1) 'முடிச்சோதியாய்' என்கிற திருவாய் மொழியில் அவனுடைய அர்ச்சாவதார திவ்யமங்கள விக்ரஹம் மற்ற எல்லாவற்றையும்விட விசேஷமானது என்று நிரூபித்தார். இந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தின் சோபை பரமாத்மாவுக்கும் ஆகர்ஷகமா யிருக்கும் என்னும் அர்த்தத்தை (2) 'மலர்த்துழாய் மாட்டே நீமனம் வைத்தாய்' என்றருளிச் செய்தார். மேல் ஆறாந்திருவாய் மொழியில், (3) 'தஞ்சமாகிய' என்கிறபாட்டில் 'நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே' என்று ஸர்வவிதமான பந்துவாயும் இருக்கிற ஸர்வேச்வரனை நாம் எந்த த்ரவ்யத்தைக்கொண்டாகிலும் எந்தரூபத்தைக் கொண்டாகிலும் ஸங்கல்பித்து ப்ரார்த்திக்கிறோமோ அதேரூபத்தோடு அதே விக்ரஹத்தில் அவன் எழுந்தருளுகிறான் என்றருளிச் செய்தார். இப்படிப்பட்ட அர்ச்சாவதாரத்தின் திருவடியே பரமப்ராப்யம் என்பதை (4) 'மேவிவலம் செய்து கைதொழக் கடுங்கொல் என்றும் 'என் சிந்தனையே' என்றும், (5) 'இங்கேதிரிந்தேற்கு இழுக்குற்றென்' என்றும்பரக்க நிரூபித்தருளினர்.

பத்துக்களின் ஸங்கதி.

முதற்பத்தில் பகவானே ஸித்தோபாயம் என்று நிஷ்கர்ஷித்து, இரண்டாம்பத்தில் அவனே ஸித்தோபேய மென்று நிரூபித்தருளி, இப்படி உபாயத்வோபேயத்வங்கள் இரண்டும் திவ்ய மங்கள விக்ரஹத்தோடு கூடிய பகவானுக்கே என்று நினைத்து அதை மூன்றாம் பத்தில் அருளிச்செய்தார். நான்காவது பத்தில் ஐஶ்வர்யம் முதலிய இதரபலங்கள் விஷங்கலந்த தேனைப்போல அல்பத்வாதி தோஷ துஷ்டங்களாகையாலே பகவானொருவனையே போக்யமாக உடையவராகத் தம்மை அருளிச்செய்து ஐந்து முதல் மேல் ஆறுபத்துக்களினால் தான் அநந்யகதி என்பதை நிரூபித்தருளினர். அன்றிக்கே முதல் பத்தில் பகவான் ஸேவ்யன் என்றும், இரண்டாம் பத்தில்,

(1) 3-1-1. (2) 3-1-4. (3) 3-6-9. (4) 7-10-9. (5) 8-10-4.

188742

ஸ்ரீ:

ராவ்ஸாஹிப் டில்லி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் உபந்யாஸங்கள்.

இந்த ஸ்வாமியின் த்ரவ்ய ஸஹாயத்தால் தஞ்சாவூர் ஜில்லாவில் உபந்யாஸம் செய்யும்படி ப்ரார்த்திக்கப்பட்ட இரண்டு ஸ்வாமிகளும் பின்வருமாறு உபந்யாஸங்களை அந்த அந்த ஊர்களில் குறிப்பிட்ட தேதிகளில் செய்தார்கள். அந்த அந்த ஊர்களிலிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் கேட்டு ஆநந்தித்து தங்களுடைய க்ருதஜ்ஞதையை கடிதம் மூலமாக தெரிவித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ. உ. வே. காடாந்தேத்தி வி. கோபாலாசார்யர்—

ஆடிமீ 2, 3, 5வ பட்டுக்கோட்டை—	பக்தி, வைதிகமதம், ருக்மிணீ கல்யாணம், விசிஷ்டாத்வைதம், விவேகம்.
ஆடிமீ 16வ, 17வ, திருவாரூர்—	

ஸ்ரீ. உ. வே. நெடுந்தெருவு ஸ்ரீநிவாஸாசார்யர்—

ஆனிமீ 15வ, 16வ. கோட்டையூர்—	ஸ்ரீவைஷ்ணவமதத்தின்மேன்மை, அதை விட்டு நழுவி இருத்தல், அதை அடையும் விதம், புருஷார்த்தம்.
ஷை 28வ, 29வ, ரெதநாதபுரம்—	நாம் செய்யவேண்டிய உபாயம், பகவானுடைய ஸௌலப்யம், காருண்யம், ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் மேன்மை, பஞ்ச ஸம்ஸ்காரத்தின் ஆவச்யகதை.
ஆடிமீ 12, 13, 14வ ஸரபோஜி ராஜபுரம்—	ஸ்ரீவைஷ்ணவர்களின் மேன்மை, அவர்களின் லக்ஷணங்கள், தத்காலம் அவர்களின் தாழ்ந்த நிலைமை, முன்னுக்குக்கொண்டுவரும் ப்ரகாரம், குருபக்தி, ஆத்மகுணம்.
ஆடிமீ 17, 18, 19வ பாபநாசம்— ...	ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் பெருமை, தெய்வபக்தி, தர்மம், விவேகம்.
ஆடிமீ 23, 24, 25வ நீடாமங்கலம்— ...	ஸ்ரீவைஷ்ணவர்கள் தத்காலம் அடைந்திருக்கும் தாழ்ந்த நிலைமை, சேர்த்திருத்தும் ப்ரகாரம், ஆர்ய மதத்தின் மேன்மை, தத்வஜ்ஞானம், அது உண்டாகும் முயற்சி பகவத்க்ருபை, பிராட்டி வைபவம், ஸதாசார்ய அநுக்ரஹம், விவேகத்தின் ப்ரகாரம், பகவந்நாம வைபவம்.
ஆடிமீ 27, 28வ மாளாபுரம்—	அர்த்த பஞ்சகம், பஞ்ச ஸம்ஸ்காரம், பக்தி, ஸௌலப்யம், காருண்யம்.

ர. ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார், கார்யதர்சி.

ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்.

இந்நாடகம் ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் ஸ்வாமியின் தமிழ்மொழிபெயர்ப்புடன் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் திருவஹீந்திரபுரத்தில் விற்கப்படும். விலை ரூபா 4—0—0. சென்னையில் மௌண்ட்ரோட்டு, நிகமபரிமளம் ஆபீஸ் மானேஜருக்கு எழுதியும் பெற்றுக்கொள்ளலாம்.

கா.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

திருவஹீந்திரபுரம் ஸ்ரீவேதாந்ததேசிகன் ஸபையின்
நான்காவது வார்ஷிக
மஹோத்ஸவ விஜ்ஞாபந பத்ரிகை.

(1) ஆழ்வார் ஆசார்யர்கள் உகந்தருளின திவ்ய தேசங்கள் நூற்றெட்டுக்குள் ஒன்றாகிய திருவஹீந்திரபுரம் என்னும் திவ்யக்ஷேத்ரத்தில் நெடுநாளாய் நடந்து வருவதைப்போல் இவ்வருஷத்திலும் நாளது புரட்டாசிமீ 13உ முதல் 22உ வரையில் நடக்கப்போகிற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ப்ரும்மோத்ஸவத்தில் சில வருஷங்களாக மேற்படி ஸபையார் நடத்தி வருவதைப் போலவே நாளது வருஷத்திலும் ஐந்தாவது உத்ஸவ தினமாகிய புரட்டாசிமீ 17உ வியாழக்கிழமை (2-10-24) முதல் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் க்ரந்தங்களில் பரீக்ஷைகளும், ஸம்மானங்களும் உபயகோஷ்டி கைங்கர்ய பரர்களுக்கு ஸம்மானங்களும் நடத்துவதாக உத்தேசித்திருக்கிறபடியால், க்ரந்த பரீக்ஷையிலும் உபயகோஷ்டிகளிலும் அந்வயிக்க விருப்பமுள்ள ஸ்வாமிகள் மூன்றாவது உத்ஸவத்துக்கே எழுந்தருள வேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

(2) ஷை திவ்யதேசம், ஸ்ரீ நிகமாந்த மகா தேசிகன் வெகுகாலமாய் எழுந்தருளியிருந்து மங்களா சாஸநம் செய்யப்பெற்றதாயும் பரமதநிராகரணமும் க்ரந்தப்ரவசனங்களும் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த திருமாளிகை அமைந்ததாயுமிருப்பதாலும் இன்னும் அநேககாரணங்களாலும், ஸ்ரீ தேசிகன் மிகவும் உகந்தருளிய திவ்ய தேசம் என்பதில் ஆஸ்திகர்களுக்குச் சந்தேகமிருக்க நியாயமில்லை. ஆதலால் இப்படிப்பட்ட திவ்ய தேசத்தில் ஸ்ரீ நிகமாந்த மகா தேசிகனுடைய க்ரந்தங்களை ஷை ஆசார்யனுடைய உத்ஸவ காலங்களில் ப்ரவசனம் செய்வது ஆசார்ய கைங்கர்யங்களில் முக்கியமானது. ஆதலால் ஆசார்யபக்தர்களனைவரும் தங்களுக்கு இயன்றவரையில் த்ரவ்யஸஹாயம் செய்தும் ஷை உத்ஸவகாலங்களில் எழுந்தருளியிருந்து ஸபையை ஆதரித்தும், ஆசார்ய க்ருபைக்குப்பாத்ரர்களாக வேணுமென்றும் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம்
சேட்லூர் நரஸிம்மாசார்யர்,

திருவஹீந்திரபுரம்
ரக்தாக்ஷி வரு
ஆவணிமீ 19உ.

மதுரை வக்கீல் S. D. கிருஷ்ணய்யங்கார், B.A., B.L.

சதாவதானம் வேதாந்தாசார்யர்,

கூட்டுக்கார்யதரிசிகள்.

மணியார்டர் முதலியவைகளை சதாவதானம் வேதாந்தாசார்யர், கார்யதரிசி, ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஸபை, திருவஹீந்திரபுரம், திருப்பாபுலியூர் மார்க்கம், என்கிற விலாஸத்துக்கு அனுப்பவும்.